அந்த ஆற்றலரசருக்குத்தான் அது இருக்கிறதாம்!

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (27—10—49) வெளியூர் (28—10—49) | இதழ் 75

……………………(0)……………………

மற்றவர்களுக்கு அது கிடையாதாம்!

எப்படித்தான் கண்டுபிடித்தாரோ அந்த உண்மையை?

சுயநலமற்ற - சேவா உணர்ச்சி கொண்ட காமராஜரின் குமுறல்!

"எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டுமென்ற சுயநல நோக்கத்தில் காங்கிரசைத் தூற்றிக்கொண்டு சிலர் திரிகின்றனர். இவர்களுக்கு மக்கள் நலன், தேச நலன் ஆகியவைகளைப் பற்றி கொஞ்சம்கூட கவலையே கிடையாது."

"இன்றையதினம் காங்கிரஸ் கட்சியும் ஓய்வெடுத்துக்கொள்ளத்தான் விரும்புகிறது. அவர்கள் ஓய்வெடுத்துக்கொண்டால் அப்பொறுப்பை ஏற்று நடத்த எந்தக் கட்சியாலும் முடியாது. நிச்சயமாகச் சொல்லுகிறேன். இரண்டே நாட்களில் அவர்கள் ஓடிவிடுவார்கள் என்பது நிச்சயம்."

"பெரியார்களாக இருந்தாலும், அறிஞர்களாக இருந்தாலும் அவர்களிடம் ஒரு கொள்கைகூட கிடையாது. கொள்கை இருந்தால் செய்யவேண்டிய வேலைகள் அதிகம் இருக்கிறது. அதைச் செய்யட்டும்."

—காமராஜர்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவது-ஆட்சிப் பீடத்தில் அமருவது-நாடாள முயலுவது-ஒவ்வொரு பிரஜையின் பிறப்புரிமையாகும். ஆளும் கட்சியினரைத் தட்டிக் கேட்கத் தக்கதோர் எதிர்கட்சி இல்லாதிருக்குமானால், அதிகார மலையுச்சியில் அமர்ந்திருக்கும் ஆளவந்தார்கள் அகம்பாவத் திருமேனிகளாக மாறிவிடுவார்கள். தேர்தலுக்கு முன்பு கொடுத்திருந்த வாக்குறுதியை ஆளவந்தார்கள் நிறைவேற்றத் தவறிவிடுவார்களாயினும் அதனால் நாட்டுக்கு ஏற்படும் கேடு, பின்னர் மற்றவர்களால் களைந்துவிட முடியாத நிலையைப் பெற்றுவிடாது. வாக்குறுதியைச் செயலாற்றாமல்—செய்யவேண்டியதைச் செய்யாமல்-இருந்துவிடுவதால் கூட பெருந்தீமை ஏற்பட்டுவிடாது. ஆளவந்தார்கள் செய்யாமல் கெடுப்பது போதாதென்று, செய்தும் சிலவற்றைக் கெடுக்கும் பொருந்தாப் போக்கினைத் தடுக்க, கண்டிப்பான எதிர் கட்சி ஒன்று கட்டாயம் இருந்தாக வேண்டும். மக்களாட்சிக் கோட்பாட்டின் தலை வாயிற்படி இதுதான். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ராஷ்டரபதி காமராஜர், இந்த அரசியல் அரிச்சுவடியை அறிந்திருக்கத்தான் வேண்டுமென்ற கட்டாயம் எதுவும் கிடையாது. காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு வேண்டிய பயிற்சிக்கும், நாடாளும் பயிற்சிக்கும் காமராஜரைப் பொறுத்த வரையில், வடதுருவம், தென் துருவம் என்ற நெருக்கந்தான் உண்டு.

ஏதோ தமிழ்நாட்டின் தலைவராக நடிக்கிறார்; வேஷத்திற்கேற்ப வித விதமாகப் பேசிப் பார்க்கிறார் காமராஜர்! வாய் வலிக்கும் மட்டும், எதிர் கட்சியார் மீது வசைமாலைச் சூட்டிக் களிக்கிறார்! அவரால்மட்டுமே முடியக் கூடிய—வெற்றிகரமாகச் செய்யக் கூடிய-வசைபட்டல காலட்சேபத்தை, பெற்றிருக்கும் பதவியின் பொறுப்புணர்ந்து, சேவா உணர்ச்சியோடு. தமிழர்களுக்குத் தொண்டாற்றி வரும், தனித் தலைவர் நமது காமராஜர் ஒருவர் தான் என்பதில், எந்தத் தமிழனுக்கும் தெளிவில்லாமல் இருக்க நியாயமில்லை. அதற்கு அவர் தான் தகுதி! ஞானத்தின் தொனி நயத்தைக் கையிலால் பிரதிபலிக்க முடியுமா?

காங்கிரஸ் ஆளவந்தார்களை எதிர்க்கிறவர்களுக்கு, நாட்டுப்பற்றும், மக்களுக்கு நலந்தேடும் நினைப்பும் ஒரு துளியும் கிடையாதாம்-வெறும் சுயநலமாம்! அவரிடமும், அவர் தம் கட்சியினரிடமுந்தான் 'சேவா உணர்ச்சி' அடைக்கலம் புகுந்துவிட்டிருக்கிறதாம்! காமராஜரால் மட்டுந்தானே இந்த வாதத்தைப் புரிய முடியும்? ஓநாய் கூட புரியுமே. ஆட்டுக்குட்டியின் சுயநலந்தான் என்னைப் பகைக்குள் இருக்க, ஆட்டுக்குட்டி மறுக்கிறது என்று!

தானாகக் கிடைத்தப் பதவியை விட்டுவிட மனமில்லாமல் தான், காமராஜர் கட்டியழுகிறார் என்று நம்மால் கூட தோஷம் கற்பிக்க முடியுமே. நமக்கும் காமராஜருக்கும் இருக்கும் பெருந்தன்மை. இருந்திருக்குமானால், 'நாட்டுப்பற்று-மக்கள் நலம்' காங்கிரஸ் கழனியில் மட்டுந்தான் விளையும் பசும் பயிரா? 'ஆம்' என்று கூறுவதாக இருந்தாலும், அந்த நிலை மாறி பல திங்கள் ஆகிவிட்டதே. பதவி தேடிகள்-பர்மிட் வேண்டிகள்—லைசென்ஸ் நாடிகள்-பொருள் ஈட்டிகள்-போன்ற சுயநலக் குணாளர்களன்றோ, இன்று காங்கிரஸ் கழனியில் கூடாரமடித்துக்கொண்டு இருக்கிறார்கள்? மறுக்க மன உறுதி உண்டா, இந்த 'மாபெரும்' தலைவருக்கு இந்நேரம்?

பிரகாசம்பந்துலு காருவைப் புறக்கணித்து விட்டு, ஓமந்தூராரைக் கொண்டு வந்து குடியேற்றி, இரண்டாண்டுக்குப் பின்னர் அவரையும் அப்புறப்படுத்தி விட்டு, குமாரசாமி ராஜாவைக் கொலுவீற்றிருக்கச் செய்திருப்பது, காமராஜரின் கைத்திறம் தான் என்ற கூற்றினை மறுப்பதாக இருந்தாலும், இந்தச் செயலிலே 'நாட்டுப்பற்று—மக்கள் நலம்' ஒளிந்துகொண்டு இருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டுவாரா தமிழ்நாட்டு ராஷ்டிரபதியார்? திறமையான நிர்வாகத்திற்கு, இந்தத் திருவிளையாடல் ஒரு திறவு கோலா என்ன? காமராஜரே கூறுங்கள், கோபத்தைக் கொஞ்ச நேரம் கட்டி வைத்துவிட்டு!

அதிகாரத்தை விட்டு விலகிவிட காங்கிரஸ் விரும்புகிறதாம்!-காமராஜரின் கற்பனை இது! இரண்டு நாளைக்குக் கூட வேறு எந்தக் கட்சியினராலும் ஆட்சியில் இருக்க முடியாதாம்! இதுவும் காமராஜரின் ஆருடம்! இனி காமராஜர் தமிழ்நாட்டு ராஷ்ட்ரபதி என்ற நிலையோடு மட்டும் விட்டுவிடுதல் கூடாது-உலக அரசு என ஒன்றை ஏற்படுத்தி; அதன் அமைப்பு முறைவிதிகளை அவரை விட்டு எழுதச் செய்து, அவரையே அதற்கு முதல் தலைவராக நியமித்துவிட வேண்டியதுதான், அவருடைய மேதைக்கு, உலகம் அளிக்க வேண்டிய சாதாரண பரிசு!

கொள்கை எதுவும் நமக்குக் கிடையாதாம்! இதுவும் அவருடைய அறிவு ஊற்றின் ஒரு துளி! நமது கோட்பாடுகளைச் சாதாரண மக்களால் புரிந்துகொள்ளும் நிலை இருந்தும் கூட, காமராஜரால் அறிந்துகொள்ள முடியாதது கண்டு, நாம் இரக்கப்படுகிறோம்! வேறு என்ன செய்வது?

அமெரிக்காவில் மோட்டார் உற்பத்தி

மோட்டார் உற்பத்தியாளர் சங்க அறிக்கை படி 41 மில்லியனுக்கு அதிகப்படியான கார்கள், டிரக்குகள், பஸ்கள் ஓடுகின்றன. கடந்த ஆண்டுகளில் 10 மில்லியன் மோட்டார்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு முன் பதிவு செய்யப்பட்டதை விட இவை அதிகம் என அச்சகம் தெரிவிக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில், மக்கள் ஒரு ஆண்டில் மோட்டார் வண்டியில் பிரயாணம் செய்யும் தூரம் 400 000 மில்லியன் மைல்கள் அதாவது போருக்கு முன் இருந்ததை விட 20 சதவிகிதம் அதிகமாகும். இதில 56 சதவிகிதம் மைல்கள் தொழில்களுக்கும் வியாபாரத்துக்கும் கார் ஓட்டிச்செல்லவர்களாகும்.

அகிம்சா வாதிகளுக்கு அறிவுரை

சிக்கனத்தில் செம்மை வேண்டும்

பட்டினிப் பட்டாளத்தை வளர்க்காதீர்

இந்திய அரசியலாருக்குத் திடீரென சிக்கனத்தில் நாட்டம் செல்ல ஆரம்பித்து விட்டது. அடுத்து வரும் ஆண்டில் அதாவது 1950 51-ல் மொத்த செலவில், 80 கோடி ரூபாயைக் குறைத்துவிடப் போகிறார்களாம். இத்திட்டம் இந்திய உதவி முதலமைச்சர் சர்தார் படேல் அவர்களால் தயாரிக்கப்பட்டதெனத் தெரிகிறது. பல நாட்களாக இதுபற்றி மற்ற அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து அவர் இத்தகைய முடிவிற்கு வந்தாராம்.

இந்திய அரசியலில் படேலின் பங்கு எத்தகையது என்பது நாம் அறிந்ததே. ஆலோசனை கூற அமைச்சர்கள் பலர் இருப்பினும் படேல் அவர்கள் பகர்வதே சட்டம் என்ற நிலை இருந்து வருகிறது. இதுதான் படேலின் பரிபக்குவம். முதலில் 40 கோடியைக் குறைப்போம், அடுத்த ஆண்டில் 80 கோடியைக் குறைப்போம் என்று, நிதி அமைச்சர் ஜோழர் ஜான் மத்தாய் கூறியதாகத் தெரிகிறது. படேலின் பரிபூரண ஆதரவு இதற்கிருப்பதில் வியப்பில்லை. அமைச்சர்களை மட்டுமே கலந்துகொள்ளாமல் தொழில் அரசுகளையும் கலந்துகொண்டுதான் படேல் இம்முடிவுக்கு வந்திருக்கலாம்.

அரசியலார் சிக்கனத்தைக் கைக்கொள்வது வரவேற்கத் தக்கதே. அவசியமும்கூட. எனவே செலவைக் குறைக்கும் இத்திட்டத்தை நாம் குறைகூறவில்லை ஆனால் செலவைக் குறைக்கும் விஷயத்தில் அரசியலார் தமது சிந்தனையை மட்டும் சற்று அதிகமாகச் செலவிட வேண்டும். அதைக் குறைத்துவிட்டு ஆக்க வேலையில் ஈடுபட்டால் குறைக்கப்பட வேண்டிய செலவுகள் குறைக்கப்பட மாட்டா.

இந்திய அரசியல், காந்தியாரின் அகிம்சை தத்துவத்தின் மீது அமைக்கப்பட்டது. ஆகவே அந்தத் தத்துவம் காப்பாற்றப்பட வேண்டும். இல்லையேல் காங்கிரசார் ஓயாது பேசிவரும் காந்தீயச் சிறப்புகள் சீர்குலைந்துவிடும். இந்தியா அகிம்சைக்கு இருப்பிடம் என்று அகில உலகிலும் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. வெளியாரும், உண்மையிலேயே இந்தியாவில் அகிம்சா தர்மம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எந்த வல்லரசும் இப்படிப்பட்ட புண்ணிய பூமி மீது போர் தொடுக்க விரும்பாது. எனவே, இந்தியாவுக்கு மற்ற வல்லரசுகளுக்கு இருப்பது போல் பலத்த பாதுகாப்புத் தேவையில்லை. ஆத்மிக பலம் இருக்கும்போது படை பலம் எதற்கு!

எனவே ஏதேனும் செலவைக் குறைக்க வேண்டுமானால், அது இராணுவச் செலவாகத்தான் இருக்கவேண்டும். இராணுவச் செலவுதான் மற்றச் செலவுகளை விட அதிகம். வருவாயின் பெரும்பகுதியை விழுங்கி ஏப்பமிட்டுக்கொண்டிருப்பது அதுவே. முன்னர் பிரிட்டிஷ் ஆட்சியிருந்த போது இராணுவச் செலவு அதிகமாக இருந்ததைக் காங்கிரசார் அடிக்கடிச் சுட்டிக் காட்டி பேசியதையும் எழுதியதையும் இச்சமயத்தில் காங்கிரஸ் ஆட்சியாளருக்கு நினைப்பூட்ட விரும்புகிறோம்.

பிரிட்டிஷ் ஆட்சி அந்நிய ஆட்சி, ஆகவே இந்தியாவின் உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்புக்கென அதிகம் செலவிட வேண்டிய நிலையில் பிரிட்டிஷார் இருந்து வந்தனர். இன்றைய நிலை அதுவல்ல; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்காக ஆட்சி செலுத்தும் அன்பர்களே ஆட்சிப் பீடத்தில் இருக்கின்றனர். இப்படிப்பட்ட ஆட்சிமுறையில காங்கிரசாருக்கு பயம் இருக்கக் காரணம் இல்லை. இந்நாட்டு மக்கள் காந்தீய பாதையில் சென்று சென்று பழக்கப்பட்டவர்கள். மற்ற நாட்டாரைப் போல் புரட்சியில் புரண்டெழுந்தவர்களல்லர். ஆகவே உள்நாட்டில் பெரும் போர் எழுந்துவிடும் என்ற ஐயமோ அச்சமோ அகிம்சா

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

மாலை மணி

சென்னை 27—10—49 வியாழக்கிழமை

அத்துணையும் 'அரோகரா!'

இந்தத் துணைக்கண்டத்தின் முக்கியத் தொழில் விவசாயம். இரண்டாம் நிலையில் இருப்பது கைநெசவு. முக்கியத் தொழிலான விவசாயத்திலும், வேண்டப்படும் அளவில் முன்னேற்றம் ஏற்படவில்லை. வேறு நவீன இயந்திரத் தொழில்வளம் காலாகாலத்தில் தோன்றாததால், முக்கியத் தொழிலான விவசாயத்தில் ஆள்பெருக்கம் ஆண்டுக்கு ஆண்டு பெருகி வந்தது. வரப்போட்டில் காட்டையே கட்டியழவேண்டியவர்கள் தொகை எண்ணிக்கையில் கூடிற்று. வளர்ந்து வந்த மக்கள் தொகைக்கேற்ப, விவசாய உற்பத்தியிலும் பெருக்கம் ஏற்படாததால், வறுமை கோரத் தாண்டவம் புரிந்துவந்தது. மிருகம் போல் வாழ்ந்துவரவேண்டிய நிலை, பெரும்பாலான மக்களுக்குப் பொது விதியாயிற்று. இந்த விவசாயத் தேக்கம், பெரும்பாலான மக்களுக்கு மிருக வாழ்வைக் கொடுத்துவந்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை. வேலையற்றோர் பட்டாளத்தையும் சிருஷ்டித்து, வளர்த்து வந்தது. மரணத்தின் பிடிக்குப் பயந்து, பிறந்த பொன்னாட்டைத் துறந்து, கடல்கடந்து, கண்காணா சீமையில், கண்கசக்கி—மனம் வெதும்பி, வாழ்ந்துவர வேண்டிய நிர்ப்பந்தத்தையும் நம்மவர்க்குக் கொடுத்துவந்தது.

இந்த மூலத் தொழிலிலே ஏற்பட்டத் தேக்கம் இத்துடனு நின்றுவிடவில்லை. மற்றத் தொழில் துறைகளையும் தாக்கி, அதன் வளர்ச்சியையும் குலைத்தது. கைத்தொழில்களில் முக்கியமானது நெசவுத் தொழில். இந்தியத் துணைக் கண்டத்தில், நமது திராவிடர்தான், நெசவுத் தொழிலில் முன்னணியில் இருப்பது. இன்று மட்டுமல்ல இந்தச் சிறப்பு. வரலாறு வெளிவராதக் காலத்திலேயே, நமது கைநெசவுத்துணிகள் கடல்கடந்து சென்று, வெளிநாட்டினரை வெட்கப்படச்செய்து இருக்கின்றன. தற்காலம், இந்தத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியால், நாம்பெறும் வேதனையிலிருந்து, சிறிதுநேரம் சமாதானம் பெறக்கூட, இந்தப் பழம் பெருமை பயன்படக் காணோம். பதிலுக்கு நாம் பெற்றுள்ள வேதனையைக்கூட்டவே முன்னுள் சிறப்பு பயன்படுகிறது. இன்று நெசவிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியின் நிலையையும், அதற்கான காரணத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளையும் பிறகு கவனிக்கலாம்.

இதுசமயம், நமது ஆளவந்தார்களும், நெசவாளர்களும், பொது மக்களும் கருத்துச் செலுத்த வேண்டிய முக்கியம் நிறைந்தது வேறு ஒன்று இருக்கிறது. திராவிட நாட்டின் நெசவுத் தொழிலில், அதுவும் ஒரு சிறந்த உறுப்பாக இருப்பதால், முதல் முதலாக அதனை ஆராய்ந்து அறிவது அவசியமாகிறது.

காங்கிரசின் நிர்மாண திட்டத்தில் அஸ்திவாரமாக இருப்பது கதர்த் தொழில் ஆகும். காங்கிரஸ்காரர்களால் பெருமையாகப் பேசப்படும் மற்ற நிர்மாணத் திட்டங்கள் எல்லாம், இந்தக் கதர்ச் சூரியனைச் சுற்றி இருக்கும் கோள்கள் ஆகும். காந்தியாரின் கற்பனை இது. காங்கிரஸ் வானத்தில் ஒளி வீசிக்கொண்டு இருக்கும் மூலக்கோளான கதர்ப்பரிதியின் ஒளியே மங்க ஆரம்பித்து இருக்கிறது. இது முதல் தடவை அல்ல. ஆயிரம் தரத்துக்குமேல் இருக்கும் இந்த அந்தகாரநிலை கதர்ச் சூரியனுக்கு ஏற்பட்டது!

கதர், சூரியன் போல இயற்கையில் ஒளி வீசக்கூடியதாக இருந்திருக்குமானால், அதாவது தங்குதடை இல்லாமல் வளர்ந்து வரும் சக்தி கதர்த் தொழிலுக்கு இருந்திருக்குமானால், நெருக்கடிகளுக்குமேல் நெருக்கடி ஏற்பட வேண்டியஅவசியமே இருந்திருக்க முடியாது. பாதாளத்தில் புதைந்து கிடந்த சர்க்காவைத் தோண்டி எடுத்து, மக்களிடை உலவவிட்டதும், இறந்துபோன ஒரு தொழிலுக்குப் புத்துயிர் அளிக்க முயன்றதும், முதல்தரமான பைத்தியக் காரத்தனம். அதில் ஏதோ சக்தி மறைந்திருக்கிறது என்று மக்களை நம்பவைத்ததும் பைத்தியக்காரத்தனம், மான்செஸ்டரின் நெசவாளர்களை அழித்துவிடும் ஆற்றல் உண்டு என்று பறைசாற்றினதும் பைத்தியக்காரத்தனம். அரசியல் விடுதலை கிடைத்தபின்னரும் அதனைக் கண் காட்சிச் சாலையில் தள்ளி அடைக்காமல், மக்கள் கைகளில் விளையாடவிட்டு வைத்திருப்பது, எல்லாவற்றைக் காட்டிலும் பெரும் பைத்தியக் காரத்தனம்!

காந்தியார்தான், இந்தக் கதர் சூரியனின் சிருஷ்டிகர்த்தா — அவர் காலம் வரையில், அவருடைய திருப்திக்காக, கைராட்டினத்தைச் சுற்றி வழுதலை மன்னித்துவிடலாம். அன்னியர் ஆட்சி இருந்த நிலையில், கைராட்டினத்தை ஒரு அரசியல் சின்னமாகக் கொண்டிருந்ததற்குக் கூட அவசியம் இருந்திருக்கலாம்! காங்கிரஸ்காரர்கள் கையில் ஆட்சிப்பொறுப்புச் சிக்கி விட்டபின்னரும், அதனை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு இருப்பதில் ஒரு துளியும் பொருத்தமில்லை.

காந்தியாரின் கோட்பாடுகள் பலவற்றையும், அப்புனிதர் உயிருடன் இருக்கும்போதே, அத்தூயவர் மனம் பதைக்கப்பதைக்க சிரழித்தவர்கள், தேவைப்படாத கைராட்டினத்துக்கு மட்டும் சலுகைத் தந்துகொண்டு இருப்பது அருத்தமற்றதாகும். அனைவருக்கும் வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்யப்போகிறோம், என்று காங்கிரஸ் ஆளவந்தார்கள் பேசுவதில்கடுகளவாவது நாணயமிருக்குமானால், கைராட்டினத்தைக் குழியில் போட்டு மூடியாக வேண்டும்.

ஐந்து லட்ச கஜம் கதர்த் துணி விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கிறதாம். அதனை எப்படியாவது மக்கள் தலையில் கட்ட சென்னை சர்க்கார் யோசித்துக்கொண்டு இருக்கிறதாம். கதர் வாங்க விருப்பமுடையவர்கள், சொந்தமாக நூற்ற நூல் கொடுத்துத்தான் கதர்த் துணி வாங்கவேண்டுமென்று இருந்த நிபந்தனையையும் தளர்த்தக்கூடுமாம். இது போன்ற முகாரி கிளம்பி இருக்கிறது கதர்த் துணி குறித்து.

இப்படித் தேங்கிக் கிடக்கும் கதர்த் துணியின் விலை ஐந்து லட்சம் ரூபாயிலிருந்து ஏழு லட்சம் ரூ. வரையில்இருக்கக்கூடுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கோவைமாவட்டத்திலுள்ள அவிநாசி பகுதியில் ஆராய்ந்து அறிந்த ஆளவந்தார்களின் அலுவலர் அளித்துள்ள அறிக்கையில், பத்துப் பதினைந்து சதவிகித மக்கள் கூட கதர்த்துணி கட்டுவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். கதர்த் தொழில் வெற்றிபெறுவதற்கு அவர் சிறந்த யோசனை ஒன்றும் கூறியுள்ளார்! அதாவது, ஆலைத் துணிகளின் இறக்குமதியைத் தடுத்துவிட்டால் கதர்த் தொழில் வளம்பெறும் என்கிறார் அந்த அரசாங்க ஆய்வுரையாளர்! நல்ல காலம்! கைத்தறிகளையும் தொலைத்து விட்டால், கதர்த் தொழிலுக்குப்போட்டியேஇல்லாமல் கதர்த் தொழில் வளர்ந்து. வாழ்ந்து, மக்கள் அனைவரின் துணித் தேவையையும் நிறைவேற்றி விடுமே என்று கூறாமல் விட்டாரே, அதுவரையில் நாம் மகிழ்ச்சி அடைய வேண்டியது தான்!

வேறு துணியே சந்தையில் கிடைக்காமல் இருந்தால் கதர்த் தொழில் கொழுந்துவிட்டு எரியும் என்பதில் ஆட்சேபனை இல்லை. கைராட்டினத்தையும் வீசி எறிந்து விட்டால், நமது முன்னோர்கள் போல, மரவுரிகளையும் இலைகளையும் கட்டிக்கொண்டு, இயற்கையோடு இயைந்த வாழ்வு நடாத்த முடியுமே என்று, ஒரு அரிய சந்தர்ப்பத்தை நமக்களிக்க, நமது ஆளவந்தார்கள் முனைந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை!

அனைவரும் விருப்பமாக வாங்கும் தன்மையில் கதர்த்துணியில் கவர்ச்சி இல்லை.

ஆலைத் துணியைப் பார்க்கிலும், கைநெசவுத் துணியைக் காட்டிலும், விலையில் கதர்த்துணி கூடுதலாக இருக்கிறது.

மற்றத் துணிகளைப் போல் கதர்த்துணி நீடித்து உழைப்பதில்லை.

நாலு முழக் கதர்த் துணிக்குத் தேவைப்படும் பஞ்சைக் கொண்டு பத்து முழத்திற்கு மேல் ஆலைத் துணி உற்பத்திச் செய்யக்கூடும்.

கதர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு கஷ்டம் அதிகம்-கூலியும் குறைவு!

நெசவாளிகளையும், நூல் நூற்பவர்களையும் மிருகம் போல் உழைக்க வைக்கிறது.

அறிவியல் வளர்ச்சியை அழிக்கிறது-ஓய்வை ஒழிக்கிறது-முன்னேற்றத்தை முறியடிக்கிறது.

செல்வப் பெருக்கத்தை மட்டுப்படுத்துகிறது, இல்லாமையை வளர்க்கிறது. என்றைக்கும் உருப்படாத நிலையைப் பெற்று விட்டு இருக்கிறது.

இவ்வளவு குறைபாடுகளோடு உள்ள ஒரு கதர்த் தொழிலுக்கு, நமது ஆளவந்தார்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சி எவ்வளவு தெரியுமா? ஆண்டு ஒன்றுக்கு லட்சக் கணக்கில் மக்கள் தந்த வரிப்பணத்தை, இதற்காகப் பாழாக்குகிறார்கள். ஸ்தல ஸ்தாபனங்கள் எல்லாம், கதர்த் துணியையே வாங்கி உபயோகிக்க வேண்டுமென்று உத்திரவுபோட்டுள்ளார்கள், தினம் தினம் ஊர் ஊராகச் சென்று நாவரட்சி ஏற்பட 'கதர் கட்டுங்கள்' என்று கத்திப் பார்க்கிறார்கள். எல்லாவற்றிற்கும் ஒரே பயன் தான் விளைவாகிறது. அத்துணைக்கும் 'அரோகரா!' என்ற பதிலையே கதர்த் தொழில் திருப்பித் தருகிறது.

இவ்வளவு அனுபவத்திற்குப் பின்னரும், கதர்த் தொழிலுக்கு புத்துயிரளிக்கும் போக்கைக் கை விட்டு விட்டு, கைநெசவுக்கு ஆதரவு காட்டுமாறு ஆளவந்தார்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். கதர்த் தொழிலுக்குச் செய்யப்பட்ட அளவிற்குக் கைநெசவுத் துணிக்குக் காங்கிரஸ் பிரசாரம் செய்திருக்குமானால், கைநெசவுத் துணிக்கு இன்று ஏற்பட்டுள்ள பயங்கரமான நெருக்கடிபோல் ஏற்பட்டிருக்கவே நியாயமிருக்காது. நெசவுத் தொழிலின் திறமும் மேலும் வளர்ந்திருக்கும், கதர்த் தொழிலில் ஈடுபட்டவர்களையும் கைநெசவு ஏற்றுக் கொண்டும் இருக்கும். பொதுவாக வாழ்க்கைத்தரமும் கொஞ்சம் உயர்ந்திருக்கும், கதர்த்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களைப் போன்றே கைநெசவில் ஈடுபட்டுள்ளவர்களும் பரம ஏழைகள் தான் என்பதை ஆளவந்தார்கள் நினைவில் வைத்துக் கொண்டு, கதர்த் தொழிலுக்கு முடிவாக பிரிவு உபசாரம் படிக்க முனையட்டும். நாட்டின் செல்வப் பெருக்கத்திற்கு உடனடியாகச் செய்ய வேண்டிய முதற்பணி-முக்கியப் பணி இது ஒன்றுதான் என்பதை ஆளவந்தார்களுக்கு நினைவு மூட்டுகிறோம். மீண்டும், அனுபவ அறிவு பெறாமல், பழைய போக்கிலேயே போய்க்கொண்டிருப்பார்களேயானால், 'அத்துணைக்கும் அரோகரா!' என்று இசைத்துக்கொண்டு, முடங்கிக்கிடக்கும் மக்கிப் போனக் கதர்த் துணி மூட்டைகளைச் சுமந்துகொண்டு, ஊர் சுற்றி விற்பனைச் செய்ய முனையட்டும். நாம் வேண்டாமென்று சொல்லப் போகிறோம்!

உலைக்கூடம்

['சம்மட்டி']

மிஸ்டர் அண்டு மிஸ்சஸ்

அரங்கநாதர் லடாய்!

"ஆபத்பாந்தவா! அனாத ரட்சகா! பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமா! இருள் சூழ்ந்துகிடந்ததேயப்பா இதுவரையில் உம் இருப்பிடித்தில்! என்னபாடு பட்டுக்கொண்டு இருந்தாயோ இருட்டறையில்!"

"இதுகாலபரியந்தம், உம் கமலக் கண்களை, என் கண் குளிரப் பார்க்கும் பெரும்பேறு வாய்க்காமல் இருந்ததேயப்பா! பவளவாய் கண்டேன்! திருத்துளாய் மார்பைக்கண்டேன்! கழலடிக் காணப்பெற்றேன்!"

—ஒரு பாகவதசிகாமணி—

"அரங்கா! இந்த அக்கிரமம் அடுக்குமா? இருளிலா நீ இடர்பட்டுக் கிடந்தாய்? இருட்டிலே நீ பள்ளி கொண்டு இருக்கும் தத்துவார்த்தத்தை அறிய ஆற்றலுண்டா இந்த அஞ்ஞானிகளுக்கு? இந்த இருள் போன்றமாயாசரீரத்துக்குஉயிர்தரும் இருதய கமலத்தின் பிரிதிபலிப்பல்லவா உன்சன்னிதானஅமைப்பு? அந்த காலத்து ஆகம கர்த்தாக்கள் அறிந்திராததையா இந்தக் கலி காலத்து மானிடர்கள் அறிந்து விட்டார்கள்?"

"உன் சான்னியத்தியம் என்னவது? பள்ளியறை சேவைக்குஒளி விளக்குப் போடலாமா? உறக்கந் தான் வருமா? தூக்கம் கெட்டால் உம் தேகம் துரும்பாய் இளைத்து விடுமே?"

"ஏதோ, உம் பள்ளியறை இருண்டு கிடந்ததிலே, தீவட்டிப் போட்டுக்காட்டி, பக்த கோடிகளிடம் நான்கு காசு பறித்து வந்தோம்! இனி அதற்கும் மண்விழுந்து போச்சு!"

"விட்டிடுவோமா இந்த சர்க்காரை! ஒரு கைபார்த்துத்தானே விடுவோம்! நாளையே ஒரு மாநாடு கூட்டி, எங்கக் கோடத்தைத்தீர்மானமாக்குகிறோம்! வானமாமலை ஜீயர் சுவாமிகளைக் கண்டனம் செய்யச் சொல்லுகிறோம்! அகோபில மடம் காமகோடி பீடம் முதலியவற்றின் ஆச்சாரிய புருஷாளை திருமுகம் அனுப்பச் செய்கிறோம்! அரங்கா விடுவமா உம்மை வெளிச்சத்தைக்காண!"

—பட்டாச்சாரிகள்—

"அந்தக் காமாந்தகார சேஷ்டையெல்லாம் இனி செல்லாதுங்க!! பின்னலே பிடித்து கேலி பேசறது-முந்தானையைப்பிடித்து இழுக்கிறது—கையைப் பிடித்துக்கிட்டுப் பரிகாசம் பண்ணறது—கண்ணடிக்கிறது—மொறச்சிப் பார்க்கிறது-—சீட்டி அடிக்கிறது—இதெல்லாம் கூடாதுங்க இனி கூடாதுங்க! நடக்காதுங்க இனிமேல் நடக்காதுங்க! கொஞ்சம் மானம் மரியாதையா நடந்துக்கக் கத்துக்குங்க!"

—மிஸ்சஸ் அரங்கநாதர்—

"போடி! பைத்தியக்காரி! என்னுடைய பக்தர்களை பாபாத்மாக்கள் என்று எண்ணிவிடாதே! சம்சயவாதிகள் என்று தீர்மானித்து விடாதே! சண்டாளர்களல்லடி அவா! சத்புருஷாடி அவாள்ளாம்!"

—மிஸ்டர் அரங்கநாதர்—

"என்னமோ! கனவு காண்றேள்!"

—மிஸ்சஸ் அரங்கநாதர்—

"கனவுமில்லடி கற்பனையுமில்லடி! உண்மேடி உண்மை! துவாரகை யுகத்திலே, யமுனா நதியிலே, நான் புரிந்தனே ஒரு அக்கிரமம், அது நினைவிருக்கோடி நோக்கு! அசடே! இளம்பெண்கள்ளாம் ஆற்றிலே நீராடிக்கிட்டு இருந்தா, நிர்வாணமா! கரையிலே, அவா களைந்து வைத்திருந்த சேலைகளையெல்லாம், ஒண்ணுவிடாமே எடுத்துக்கிட்டு, அங்கிருந்த 'மரத்திலே ஏறி உட்கார்ந்துகிட்டேன்! குளித்திருந்த பெண்கள், குளிச்சானதும் சேலைகளைத் தேடினா! என்னே பாத்துட்டா! 'கண்ணா, சேலையே கொடுத்துடு மணிவண்ணா!' என்று கெஞ்சினா! இரு கைகளையும் சிரசுக்கு மேலே கூப்பிக் கேளுங்கோடிண்ணு ஆக்ஞாபித்தேன்! அவ்வளவுதான்! கண்டேன்! பிள காங்கிதம் கொண்டேன்! ஊர்ப் பெண்கள் மேலேநான் விளையாடின இந்தக்சயமத்தனத்தெ, 'ஸ்ரீகிருஷ்ண லீலா' எனப்பூலோகவாசிகள் போற்றாடி போற்றா! ஏண்டி அசடே! என்னே இன்னமும் நீ நல்லாத் தெரிஞ்சிக்கிலடி! தெரிஞ்சுண்டிருந்தா, இப்படியெல்லாம் பேத்தமாட்டேடி! நான் ஆண்டவண்டி ஆண்டவன்!"

—மிஸ்டர் அரங்கநாதர்—

"அதெல்லாம் அந்தக் காலம்! இது பத்திரிகைப் படிக்கிற காலம்!"

—மிஸ்சஸ் அரங்கநாதர்.—

"எந்தக்காலமா இருந்தா நமக்கென்னடி? எந்தக்காலத்திலும் நம்ம பூதேவா, நம்ம பக்கந்தாண்டி இருப்பா! அவா இருக்ற வரைக்கும் நமக்கு ஒரு கொறச்சலும் வராதுடி வராது! நாம் சயனித்திருக்கிற திருக்கோயில் கர்ப்பக்கிருகத்தில் மின்சார விளக்குப்போட்டா, என்ன சூரியன் குஞ்சுவையேக் கொண்டு வந்து குடியேற்றினாலும் நம்முடைய காமலீலாவிற்கு ஆபத்து ஒண்ணும் வந்துடாதடி! போதுண்டி போடி! சமுத்தா நடந்துக்கமண்டி!"

—மிஸ்டர் அரங்கநாதர்—

திருவாரூரில் துவக்க விழா

மாபெருங் கூட்டம்: மகிழ்ச்சி வெள்ளம்

நெடுஞ்செழியன் - சம்பத் முழக்கம்

திருவாரூர், அக். 24—

அன்பு தவழ, ஆதரவு அணைக்க, மனம் மலர, மகிழ்ச்சி பொங்க, திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாப் பொதுக் கூட்டம் நேற்று மாலை சிறப்புடன் நடந்தேறியது.

கூட்டம் கமலாலயத்தின் கீழ்கரையில், தெற்கு வீதி கூடும் பரந்த மைதானத்தில் கூடிற்று. மக்கள் மைதானத்திலும், அதனை அடுத்து காணப்படும் ரிஜிஸ்ட்ரார் அலுவலகக் கட்டிடத்தின் பரப்பிலும், நகரசபைக் கட்டிடத்தின் பகுதிகளிலும், கமலாலயத்தின் படிக்கட்டுகளிலும், நீண்டு செல்லும் கைபிடிச் சுவரிலும், வீதிகளின் தொலைவு வரை நின்றுகொண்டும் உட்கார்ந்து கொண்டும், கூட்ட நடவடிக்கைகளை ஊன்றி உள்ளன்போடு, உணர்ச்சிவயப்பட்டுக் கண்டு இறும்பூதெய்திக் கொண்டிருந்தனர். இளைஞர் கூட்டமும், முதியோர் கூட்டமும், மாற்றுக் கட்சியினரின் வருகையும் கூட்டத்திற்குத் தனிச் சிறப்பைக் கொடுத்தது. உண்மையறிவை அறியும் ஆவலால் உந்தப்பட்டு, கோமைவழிச் செல்ல துடித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் ஏராளமான அளவில் கூடியிருந்தார்கள்.

அழகிய உயர்வான மேடை அமைக்கப்பட்டிருந்தது. கூட்டம் 6 மணிக்குத்துவக்கப் பெற்றது. தோழர் விஜயராகவன் அவர்கள் முன் மொழிய, தோழர் நாகப்பன் அவர்கள் வழி மொழிய புலவர் குழந்தையா அவர்கள் தலைமையேற்றார்கள்.

தோழர் ஜமால் திராவிடநாட்டுப் பண்பாடினர். தலைவர் அவர்கள் முன்னுரையில் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துக் கூறி, திராவிட முன்னேற்றக் கழகம் உருவானதின் காரணத்தையும், மக்கள் அதனை ஆதரிக்க வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தித் தெளிவாக எடுத்துக் கூறினார்.

இரா. நெடுஞ்செழியன்

பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது, தான் இவ்வூரில் பேசி ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் ஆயின எனவும், இந்த இடைக்காலத்தில் அகில உலகிலும் மாறுதல், அனைத்திந்தியாவிலும் மாறுதல், சென்னைமாகாண ஆட்சி அமைப்பில் மாறுதல், கழகத்திலேயே மாறுதல் இவ்வளவும் நடைபெற்றிருக்கின்றன வெனவும், நாம் முக்கியமாகக் கழகத்திலே ஏற்பட்ட மாறுதலுக்குரிய காரணத்தை நடுநிலை நின்று ஆராய்ந்து பார்க்க வேண்டியது இன்றியமையாததாகிறது எனவும், கழகத்திலே ஏற்படுத்திக்கொண்டுள்ள மாறுதலை மகிழ்ச்சியோடு நாம் கொண்டிருக்கவில்லை, வேதனையின் விளைவால் ஏற்பட்ட நல்ல முடிவாகத்தான் கொண்டிருக்கிறோம் எனவும், எந்தக் கொள்கைக்காகக் கழகத்தில் சேர்ந்தோமோ, எந்தக் கொள்கையின் சின்னமாகக்கொள்ள அவரைத் தலைவராக ஏற்கச் சம்மதித்தோமோ, எந்தக் கொள்கை வேறு எவருடைய மேடையிலும் இல்லாது அவருடைய மேடையிலே இருக்கக் கண்டோமோ, அந்தக் கொள்கையிலிருந்து அந்தத் தலைவர் தவறி நடக்கக் கண்டபோது, கொள்கையே பெரிது எமக்கு, தலைவரல்ல என்று கூறிவிட வேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டது எனவும். கொள்கைக்காகவே, சர்வாதிகாரத்தையும், தொண்டர்களை உதாசீனம் செய்யும் முறையையும், உழைப்பாளிகளைக் கேவலமாக மதிக்கும் தன்மையையும் சகித்துக்கொண்டிருக்க நேரிட்டது எனவும், நம்பிக்கைக்கு ஏற்றவர்களாக நாம் இல்லை என்ற குற்றச் சாட்டைப் பொறுக்க முடியாமலும், முட்டாள்களாக இருக்க ஒப்ப முடியாமலும், கண்மூடிகளாக இருக்கச் சம்மதியாமலும் வெளியேறினோம் எனவும், அதுவும் கண்ணியத்தோடு கொள்கையைக் கொண்டு வெளியேறினோம் எனவும், பெரியாரின் பொருந்தாத் திருமணம், ஜனநாயகத்திற்கு மாறான அவரது போக்கு பற்றியும், விரிவாகவும் தெளிவாகவும், கேட்போர் உணரும் வகையில் விளக்கிக் கூறினர். அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்தும், அரசாங்கத்தின் திட்ட மில்லாப் போக்கை எடுத்துக் காட்டியும், காங்கிரஸ் அரசியலார் வெளிப் பகட்டுக்கு ஆசைகொள்ளும் தன்மையையும் விளங்க எடுத்துக் கூறினர்

ஈ. வெ. கி. சம்பத்

அடுத்துத் தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள், காங்கிரஸ் எந்தக் கொள்கைக்காகவும் வாழ வேண்டிய அவசியமில்லாத நிலைக்கு வந்துவிட்டது எனவும், காங்கிரஸ் இளைஞர்கள்—யோக்கியமானவர்களாகச் சிலர் இன்றும் அங்கு இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்குச் சில சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதெனவும்கூறி, காங்கிரஸ் ஆட்சி முறை, நேருவின் அமெரிக்கப் பிரயாணம் கள்ளமார்க்கட்காரர்கள் சார்பில் காட்டும் சலுகை, முற்போக்குச் சக்தியினை அழிப்பதற்கென்று கொண்டிருக்கும் திட்டம் ஆகியவற்றைப்பற்றி விளக்கமாகவும் தெளிவாகவும், 1½ மணி நேரம் பேசினர்.

இடையிடையே கிருஷ்ணா போட்டோ ஸ்டுடியோக்காரர்களால் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. தலைவர் முடிவுரை கூறத், தோழர் கிருஷ்ணன் அவர்கள் நன்றி கூறக்கூட்டம் இனிது முடிந்தது.

அமைதியோடும், ஆர்வத்தோடும் அவ்வளவு பெருந்திரளான மக்களும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். முன்னேற்றக் கழகத்தின் போக்கில் மக்கள் காட்டும் அளவற்ற மதிப்புக்குத் திருவாரூரின் மாபெரும் பொதுக் கூட்டம் எடுத்துக் காட்டாக விளங்கிற்று.

அதிகப் பழக்க மில்லாத— ஆனால் வற்றாத கொள்கைப் பற்றுடைய இளைஞர்களால், முன்னேற்றக் கழகம் சிறப்புற நடத்தப்பட்டு வருவது போற்றுதற்குரியதொரு பண்பாகும்.

(ந—கி)

வள்ளுவர் வகுத்த வழி

சென்னைமுத்தியாலுப்பேட்டை, புதுத் தெருவிலுள்ள திருவள்ளுவர் இளைஞர் கழக ஆதரவில், 23-ஆம் தேதி காலை, புலவர் அண்ணாமலை அவர்களால் (செயிண்ட்கேப்ரியல்ஸ் உயர்தரப் பாடசாலை) திருக்குறள் வகுப்பு நடத்தப்பட்டது. பிறகு, புலவர் பு. செல்வராஜ் அவர்கள் தலைமையில் பேச்சுப் பயிற்சிக் கூட்டம் நடந்தது. வகுப்பைச் சேர்ந்த நான்கு மாணவர்கள், பயனிலசொல்லாமை, தீவினையச்சம் என்பவைபற்றிப் பேசினார்கள்.

தலைவர் தம் முகவுரையில்,

“திருவள்ளுவருடைய குறள் மக்கள் வாழ்விற்கு நல்ல பாதையை அமைத்துத் தருவதாகும். தமிழர் பண்பை, நாகரிகத்தை உலக மக்களுக்கு எடுத்துக்காட்டுவதாகும். ஒவ்வொருவரும் திருக்குறளை மனப்பாடம் செய்வதுடன், வாழ்க்கைத்துறையில் அவற்றைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

குறளாசிரியர் மக்கள் உயர் வாழ்வு வாழ்வதற்குரிய வழிகளை அமைத்துக் குறள் இயற்றினார். ஆனால் பிற்காலத்தில்வந்த பரிமேலழகர்போன்ற உரையாசிரியர்கள், ஆசிரியர் கருத்துக்கு நேர்முரணாக உரை எழுதிவைத்துள்ளார்கள் இன்றும் சிலர், குறள் பிற்காலநூலென்றும், வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதென்றும், வள்ளுவர் என்னும் பெயரே வடமொழிப் பெயரின் தமிழ்த்திரிபென்றும் வாய்கூசாது கூறிவருகின்றனர். தமிழ் உயர் பண்பைக் குறைப்பதென்பது சிலருடைய நீண்டநாளைய வேலையாக இருந்து வருகிறது. சிலர் வேண்டுமென்றே பிறர் தயவுக்காக, இச்சகத்துக்காக — இவ்வாறெல்லாம் கூறித்திரிகின்றனர். இவற்றையெல்லாம் நீங்கள் நம்பக்கூடாது. திருக்குறளை அனைவரும் படிக்கவேண்டும். இக்காலத்தில் வெளிவந்துள்ள எளிய உரைகளைப் படித்துப் பொருள் விளங்கிக்கொள்ளவேண்டும். இத்தகைய வகுப்புகளுக்குவந்து, ஐயங்களைப் போக்கிக்கொள்ளவேண்டும். திருக்குறளின் உண்மையான கருத்தை எங்கும் பரப்பவேண்டும்’ என்று பேசினர். பிறகு, ஆசிரியர் புலவர் அண்ணாமலை அவர்கள், வகுப்பைப் பற்றி விளக்கிய பிறகு, துணைத் தலைவர் தோழர் கோ. முத்து பி. ஏ., அவர்கள் நன்றி கூறினர்.

நாட்டு நடப்பு

கிருஷ்ணகிரி:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 17—10—49ல் இவ்வூர் குறள் நிலையத்தில் கூடியது. அதுபோது தோழர் வி. வெங்கடரத்தினம் அவர்களையும் செயற்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டது பிறகு மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

* * *

கோயம்பேடு:—இவ்வூர் கிளையின் சார்பாக, தோழர் சி. கே. பென்ஜமேன் தலைமையில், தோழர் எஸ். பாவு தி. மு. க. கொடியை ஏற்றுவித்தார். தோழர்கள் மு ஞானகிராமன், இன்பவாணன், சம்பந்தன், கலைமணி ஆகியோர் பேசினர். பின்பு சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டு விழா முடிவுற்றது

(வி. உ.)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

28-10-49

கூடலூர்-புதுப்பட்டினம்:—	என். ஜீவரத்தினம், ஈ. வெ. கி. சம்பத். இரா. இளம்வழுதி, தில்லை வில்லாளன்.

29-10-49

ஆனைமலை :—	டி. கே. சீனிவாசன்
ஐவநல்லூர் (நாகை) :—	ஈ. வெ. கி. சம்பத்

30-10-49

நாகை :—	இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத்தம்மையார்
தர்மபுரி :—	சி. பி. சிற்றரசு
பொன்னிரை :—	டி. கே. சீனிவாசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி
மம்சாபுரம் :—	எம். எஸ். ராமசாமி

பண மூட்டைகளிடம் பல்லிளிப்பதும்-பஞ்சைகளிடம்பாய்வதும் பொருந்துமா?

நிர்வாகத் திறமையின்மையா? நெஞ்சுத் துணிவின்மையா?

கொள்முதல் அதிகாரிகள் ஏழை உழவர்களையே பெரிதும் நிர்ப்பந்தித்து வருகிறார்கள் என்று, அமைச்சர் தோழர் பக்தவத்சலனாரிடம் கிராம மக்கள் அண்மையில் முறையிட்டார்கள். அவர்கள் முறையீட்டைக் கேட்ட அமைச்சர்,

“கொள்முதல் அதிகாரிகள் நிர்ப்பந்தம் செய்திருக்கலாம்...செல்வாக்குள்ளவர்களும், பணமுள்ளவர்களும் தான்யங்களை மறைவாகப் பதுக்கி வைத்திருக்கின்றார்கள் அதனைக் கொள்முதல் அதிகாரிகள் கண்டுபிடிக்க முடியாததாலோ, வேறு எந்தக் காரணத்தாலோ விடப்படுகின்றது. அதனால் மீதி மக்களிடம், தாங்கள் கொள்முதல் செய்ய வேண்டிய அளவை சரிக்கட்டுவதற்காக, நிர்ப்பந்தம் செய்திருக்கலாம்,” என்று கூறியுள்ளார். பொதுவாக அமைச்சரிடம் முறையிட்டவர்கள் ஏழைகள். தங்களிடம் கொள்முதல் அதிகாரிகள் காட்டும் ஆடம்பர ஆர்ப்பாட்டங்களை நிறுத்தவேண்டுமென்றே அமைச்சரிடம் அவர்கள் முறையிட்டார்கள். ஆனால் அமைச்சர்; செல்வாக்கு-பணம் உள்ளவர்கள் செய்யும் பதுக்கல் வேலையைக் கொள்முதல் அதிகாரிகள் விட்டுவிட்டு, ஏழைமக்களிடம் நிர்ப்பந்தம் செய்வதற்குக் கூறியுள்ள காரணம் திருப்தியாக இல்லை. பணக்காரர்களின் பதுக்கல் வேலையைக் கண்டு பிடிக்க இந்தக் கொள்முதல் அதிகாரிகளால் முடியவில்லை என்றால், அல்லது வேறு எக்காரணத்தாலோ பணக்காரர்கள் விடப்படுகின்றனர் என்றால், இதைக் கண்டுபிடித்து, ஏன் பணக்காரர்கள் விடப்படுகின்றார்கள் என்பதற்குரிய காரணங்களை ஆராய்ந்து, பதுக்கல் பேர்வழிகளைத் தண்டிக்கவும், விட்டுவிட்ட அதிகாரிகளைத் தண்டிக்கவும் அமைச்சர்கள் ஏற்பாடு செய்யவேண்டாமா? போலீஸ் சி. ஐ. டி. இலாக்கா ஒன்றிருப்பது, அரசியல் கட்சிக்காரர்களை வேவு பார்ப்பதற்கென்று மட்டுந்தானா பயன்படுத்தப்பட வேண்டும்?

இந்த இலாக்காவைக் கொண்டு, பதுக்கல்காரர்களைப் பணிய வைக்கும் வேலையை அமைச்சர்கள் செய்ய முடியாதா? செய்யக் கூடாதா? ஆனால், இதற்குத் துணிவு வேண்டும். இந்த வேலையில் முனைந்தால், பல கடசித் தோழர்களின் வெறுப்புக்கும் பகைமைக்கும் ஆளாக வேண்டிவரும். பணக்காரர்களின் ஒத்துழையாமைக்கு ஆளாக வேண்டிவரும். இவற்றை எல்லாம் எண்ணிப் பணக்காரர்களுக்கு அஞ்சி, அவர்கள் விருப்பப்படி விட்டுவிட்டு, ஏழை உழவர்களை, சின்னஞ்சிறு நிலக்காரர்களை நிர்ப்பந்தப்படுத்தித் தொந்தரவுக்குள்ளாக்குவதென்பது எந்த வகையில் நியாயமான செயலாயிருக்க முடியும்?

நாட்டிலே இவ்வாறு பணக்காரர்கள் மனம்போனபோக்கில் நடந்துகொள்ள விடப்படுவதும், ஏழைகளை மிரட்டுவதுமான செயல் நடந்துகொண்டேயிருந்தால், இது எந்த வகையில் பொது மக்களாட்சி என்ற பெயரை வகிக்க முடியும்!

பணக்காரர்களைப் பணிய வைக்கும் பணியைச் செய்ய வழிகாண முடியாத அமைச்சர், அப்பணக்காரர்களைக் காட்டிக்கொடுக்க அதிகாரிகளால் மிரட்டி நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்படும் உழவர்களின் உதவியைக் கோருகிறார். அரசாங்கம் தன் இரகசியப் போலீஸ் இலாகாவைப் பயன்படுத்தி இந்தப் பணக்காரர்களின் பதுக்கல் வேலையை அடக்க முன் வராதிருக்கும் போது, ஏழை உழவர்கள் காட்டிக் கொடுக்கும் வேலையில் இறங்கினால், அவர்கள் வாழ்வு என்னாகும்? அவர்கள் பணக்காரர்களின் கோபாவேசத்துக்கு ஆளான பிறகு, வாழத்தான் முடியுமா? இந் நிலையில் ஒருபுறம் அதிகாரிகள் தொல்லை இருக்க, மற்றொரு புறம் பணக்காரர்களின் தொல்லையையும் வளர்த்துக் கொள்ள ஏழை உழவர்கள் முன் வருவது எங்ஙனம் முடியும், என்பதை அமைச்சர் எண்ணிப்பாராதது வேடிக்கையாகத்தானிருக்கிறது.

அமைச்சரின் போக்கு இவ்வண்ணமிருந்தால், நாட்டிலுள்ள ஏழை மக்களின் நிலை உயருமென நம்ப முடியுமா? ஏழைகள் இதை எதிர்பார்க்கத்தான் முடியுமா?

திட்டத்தின் திறம் தெரியவேண்டும்

கள்ளிறக்கும் தொழிலாளர் கவலை தீருமா?

அண்மையில் திருநெல்வேலியில் ஜில்லா மது விலக்கு குழுவினரின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக் கூட்டத்திற்குத் தோழர் ஆர். எஸ். சப்பையா பிள்ளை தலைமை வகித்தார். ஜில்லா அபிவிருத்தி அதிகாரி தோழர் லட்சுமி காந்த முதலியார், மதுவிலக்கு ஏற்பட்ட பின்னர், முன்னுள் மரமேறும் தொழிலாளர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இது காறும் எடுக்கப் பட்டிருக்கும் முயற்சிகள் பற்றிய அறிக்கை ஒன்றைப் படித்தார். அதில், 1948—ம் ஆண்டு அக்டோபர் 2-ம் நாளுக்குப் பிறகு 393 வெல்ல உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களில், 391 சங்கங்கள் வேலை செய்து வருவதாகவும், முன்னுள் கள் இறக்கும் தொழிலாளர்களில் 33, 058 பேரும், பனைமர சொந்தக்காரர் பலரும் உறுப்பினராகச் சேர்ந்திருப்பதாகவும், 28, 225 முன்னுள் கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு பதனீர் இறக்க லைசென்ஸ் வழங்கப் பட்டிருப்பதாகவும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. 1949 செப்டம்பர் மாத இறுதிவரை, வெல்ல உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் 39, 405 மணங்கு வெல்லம் உற்பத்தி செய்திருப்பதாகவும், அதன் மதிப்பு 2, 30232 ரூபாய் என்றும், குறிப்பிடப் பட்டிருக்கிறது.

முன்னுள் கள்ளிறக்கும் தொழிலாளர் மீது கருணை கொண்டு, அவர்தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இத்தகைய திட்டத்தின் மூலம் பணியாற்ற முன்வந்திருப்போரைப் பெரிதும் பாராட்டுகிறோம். ஆனால் மதுவிலக்கின் காரணமாக வேலை யிழந்து வேதனைப் படுவோரின் தொகையும், தற்போது அரசியலார்? மேற்கொண்டிருக்கும் திட்டமும் ஒன்றுக் கொண்டு ஈடு செய்யக்கூடிய நிலையில் உள்ளதா என்பதே நாம் அறிந்துகொள்ள வேண்டிய செய்தியாகும் சாதாரணமாக நம் அரசியலார் மேற்கொள்ளும் பிற்காலத் திட்டம் என்ற திட்டங்களெல்லாம், பேரளவுக்குத்தான் திட்டங்களாகத் திகழ்வது வழக்கம். எனவே, இம்மாதிரி வெல்ல உற்பத்தித் திட்டத்தின் மூலம் வேலை இழந்தோருக்கு வேலை அளித்திருப்பது உருப்படியாக எத்துணை பயன் விளைத்திருக்கிறது என்பதற்கும் புள்ளி விபரங்கள் தேவை. மற்றெல்லா விபரங்களையும் வெளியிட்ட அபிவிருத்தி அதிகாரி மதுவிலக்கின் காரணமாகவேலையிழந்தோரின்மொத்த எண்ணிக்கை எவ்வளவு, அதில் தற்போது வேலை பெற்றிருப்போர் தொகை எத்தனை சதவிகிதம்; இன்னும் எஞ்சியுள்ள வேலையில்லோர் தொகை எவ்வளவு; அவர்களுக்கெல்லாம் வேலை கொடுத்தா எத்தகைய திட்டம் போடப்பட்டிருக்கிறது என்பன போன்ற விபரங்கள் வெளியிடப்பட்டாலன்றி, இது குறித்து நாம் திருப்தியடைய இயலாது. இவை அனைத்தும் வெறும் கண்துடைப்பு வேலை என்றே எண்ண வேண்டியவர்களாகிறோம்.

அகிம்சாவாதி...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

வாதிகளுக்குத் தோன்ற வேண்டிய அவசியமேயில்லை.

எனவே, எப்படிப் பார்த்தாலும் இந்தியாவுக்கு இராணுவச் செலவு அதிகமாகத் தேவை என்ற வாதத்துக்கே இடமில்லை. ஆகவே முதலில் குறைக்கப்பட வேண்டியது இராணுவச் செலவே. உள்நாட்டுப் பாதுகாப்புக்கு எவ்வளவு படை பலம் தேவையோ அவ்வளவோடுநிறுத்திக்கொண்டு, நாட்டின் வறுமையைப் போக்க முயல வேண்டும். காந்திய தத்துவத்தைக் கசடறக் கற்ற கண்ணியர்களுக்கு நாட்டின் நிலையை நாம் சுட்டிக்காட்டத் தேவையில்லை. அவர்களுக்கே தெரியும் இந்நாட்டில் பெரியதொரு பட்டினிப்பட்டாளம் இருக்கிறது என்று. இந்த பட்டினிப்பட்டாளத்தின் எண்ணிக்கை குறையாத வரையில் நாடு நலம் பெறப்போவதில்லை ஆகவே 'செலவைக் குறைக்கவும்' என்று சொல்லிவிட்டு இராணுவச் செலவை மட்டுப் குறைக்காமல் மற்றச் செலவை குறைத்து, அதன் காரணமாக நாடு வறுமையில் வீழவும், பட்டினிப்பட்டாளம் வளரவும் ஆன நிலைமையை உண்டு பண்ண வேண்டாம் என்று இரும்பு உள்ளம் படைத்த இந்திய உதவ முதலமைச்சர் படேல் பிரபுவைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இதனை ஏன் வற்புறுத்திக் கூறுகினறோமெனில், மற்றவர்களைப்போல படேல் பிரபு சாதாரண தசையால் ஆக்கப்பட்ட இதயம் படைத்தவரல்ல வென்றும இரும்பு இருதயம் படைத்தவர் என்றும் அவரது சீடகோடிகள் அடிக்கடி சொல்லுவது வழக்கம். அப்படிப்பட்ட இரும்பு இதயம் இராணுவ பலத்தைப் பெருக்கவும், அதற்கென நாட்டில செல்வத்தை அள்ளியள்ளிச் செலவிடவும்தான் தூண்டுமே யல்லாது பட்டினிப்பட்டாளத்தின் துயர் நீக்கப் பயன்படாது.

இந்த செலவு குறைப்புத் திட்டத்தால் அரசாங்க ஊழியர்களின சம்பளம குறைக்கப்பட மாட்டாது என்றும்; ஆனால் அதே சமயத்தில கட்டாய சேமிப்புத்திட்டம் தயாரிக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது. சம்பளக் குறைப்புக்கும் கட்டாய சேமிப்புக்கும் வார்த்தை அளவிலேதான் வித்தியாசமே தவிர நடைமுறையில இரண்டும் அண்ணன் தம்பிகளேயாகும். சம்பளக் குறைப்பின் மூலம் ஏற்படும் அதே கஷ்டம் தான் கட்டாய சேமிப்பின் மூலமும் ஏற்படும். எப்படியும் ஊழியர்கள தமது வருவாயில் ஒரு பகுதியை விட்டுக் கொடுக்க வேண்டியவர்களாகவே ஆகின்றனர். இதனால் ஊழியர்கள் வறுமையில் உழல வேண்டிய நிலை ஏற்படக்கூடும். இதனையும் அரசியலார் எண்ணிப் பார்க்க வேண்டும். செலவு குறைப்பைக் காரணமாகக் காட்டி இப்படியெல்லாம் நாட்டு மக்களை அவதிக்குள்ளாக்காமலிருப்பது நல்லது என்று அறிவுறுத்துகிறோம்.

அரசாங்கம் அவரையும் அழைக்கிறது!

துறையூர், அக். 25—

"அழியட்டுமே திராவிடம்" என்ற புத்தகத்தின் பதிப்பாசிரியரான தோழர் டி. கே, தங்கவேலு என்பவர் மீது 153 (A) I P C. சட்டப் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கூறி 27-10-49-ம் நாள் முசிறி சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஆஜராகும்படி. சம்மன் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது (ஓ-நி)

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

திருத்தங்கல்—சிற்றூர்க்கிளை

திருத்தங்கல், அக். 18—

இந்நகர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம், தோழர் டி. ஆர். நடராஜன் அவர்கள் தலைமையில் 16-10-49 அன்று நடைபெற்றது. அது போது, இந்நகர் திராவிடர் கழகம் கலைத்துவிடப்பட்டு, "திராவிட முன்னேற்றக்கழகம்—திருத்தங்கல் சிற்றூர்க்கிளை" (ஏகமனதாக) நிறுவப்பட்டது. தி. கழக இருப்பு ரூபாய் 3¾ யும் தி. மு. கழகத்திற்குச் சேர்த்துக் கொள்வதாக தீர்மானிக்கப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ். வி. செண்பக மூர்த்தி, துணைச்செயலாளர்:- சி. காளியப்பன், நிதி உறுப்பினர்- பி. குருசாமி, விளம்பர உறுப்பினர்-ஏ. எஸ். கனி. ஏனைய செயலுறுப்பினர்கள்:— பி. கணேசன்' எஸ். கருப்பையா, எஸ்.வி. நாதன்; வி. சேதுராமன், எம. துரைசாமி, ஏ. கே. குருசாமி, மூ சோலையப்பன், டி. ஆர் நடராஜன், ஜி. கருப்பையா. தி. மு. கழகம் பற்றிப்பலர் பேசியபின், நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

சிங்கனூர்—சிற்றூர்க்கிளை

சிங்கனூர், அக். 21—

சிங்கனூர் (திண்டிவனம்) தி. மு கழக அமைப்புக்கூட்டம தோழர் தங்கவேலு அவர்கள் தலைமையில்; 20—10—49 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு சுமார் 200க்கு மேற்பட்டோர் வந்திருந்தனர். கழக இலட்சியம பற்றி, தலைவர் பேசிய பின் கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— து. தருமராசன்; துணைச்செயலாளர்:-கு. செழியன்; நிதி உறுப்பினர்:—மா. இராசகோபால்; விளம்பர உறுப்பினர்:— தனுசு. மற்ற செயலுறுப்பினர்கள்:- ம. திருமால், பா கோவிந்தசாமி, மல்லுசாமி, மாசி, வேணுகோபாலன் இராசாராம், விசயன் கோபால்சாமி. பின்னர் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நன்றி கூறலுடன் கூட்டம இனிது முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் வரைகிறார்.

* * *

சிவகங்கை—நகரக்கிளை

சிவகங்கை, அக். 19—

இந்நகர் திராவிட இயக்கத் தோழர்கள் 16—10—49ல் கூடி "திராவிட முன்னேற்றக்கழகம்—சிவகங்கை நகரக்கிளை" நிறுவினர். கூட்டத்திற்குத் தோழர் க. இராஜசேகரன் (அட்வகேட) அவர்கள் தலைமை வகித்தார். கீழ்க்கண்ட புதிய செயற்குழு வொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— நா. சொக்கலிங்கம்; பொருள் உறுப்பினர்:—வெ அழகர்சாமி; விளம்பர உறுப்பினர்:- அ. வெங்கிடசாமி. ஏனைய செயற்குழுவினர்:— க. இராஜசேகரன், சாகுல், கு. சுப்பிரமணியன், மூ. மாரிமுத்து. பின்பு சில தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் வரைகிறார்.

* * *

பொட்டல் புதூர்—சிற்றூர்க்கிளை

பொட்டல் புதூர், அக். 19—

இவ்வூர் தி. மு. கழகக் கூட்டமும், துவக்க விழாவும்16-10-49ல் தோழர் ஏ. கே. ஏ. சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் டி. பி. வேந்தன், எம் எம். பீர்முகம்மது ஆகியோர் பேசிய பின்பு, கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர் : —டி. பி. வேந்தன், துணைசெயலாளர்:—எம். எம். அகம்மது மைதீன், நிதி உறுப்பினர்—கே. எம். மகம்மது உமர், விளம்பர உறுப்பினர் :—ஒ. ஏ. முகம்மது ஏனைய செயற்குழுவினர் :—கே. என் காதர் மைதீன கே. எஸ். காதர் மைதீன், கே. வி. காதர் மைதீன், கே.எஸ்செய்யதாபி எஸ். பி. அப்துல் ரஹ்மான், ஏ.கே. அப்பாசாமி ஆர்.முத்தையா எனத் துணைச் செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

மதுரை நகரக்கிளை

மதுரை, அக. 19—

இந்நகர் தி. மு. க. அமைப்புக் கூட்டம 16-10-49 காலை9மணிக்கு விக்டோரியா எட்வர்டு ஹாலில் நடைபெற்றது. தி. மு. (தலைமைக்) கழக அமைப்புக் குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு சுமார் 1000 பேருக்கு மேல் கூடியிருந்தனர். தலைவர் முகவுரைக்குப்பின்தோழர்கள் மதுரைமன்னன், கே. எஸ். ராமன், எஸ். முத்து, எம். அய்யாசாமி ஆகியோர் பேசினர். பிறகு "திராவிட முன்னேற்றக் கழகம்—மதுரை நகரக் கிளை" நிறுவப்பட்டுக, கீழ்க்கண்ட செயற்குழுவம் அமைக்கப்பட்டது.

செயலாளர் எம். அய்யாசாமி; நிதி உறுப்பினர்- ப. சுந்தரம்; விளம்பர உறுப்பினர்- கே. எஸ். ராசமான். ஏனைய செயலுறுப்பினர்கள்- சி. முத்திருளாண்டி, ஆர். எஸ். ராஜன், எஸ். முத்து, அ. பழனி, கு.வேலு மதுரைமன்னன், சி. பாக்கியம், எம. வி. மணி, என். எஸ். ராஜா, சொக்கலிங்கம், துரைசாமி, நாராயணசாமி, அரிகிருஷ்ணன், அ. பிச்சை, பி. ராமாநுசம், பொ. தங்கையா; எஸ். ரத்தினசபாபதி, ரா. மாரி, ரெங்கசாமி, து. மாரியப்பன், சி. இராசப்பன், சி. நடராசன், ம. பால் அதிசயராஜ், எஸ் பொன்னராஜ், எஸ். ஏ. சாமி, அ. சுந்தரராஜ், பி. கே. சேதுராமன், வி. நாகசுந்தரம். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, தலைவர் முடிவுரையுடன் கூட்டம முடிவுற்றது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

மேலாண் மதுரை நாடு-சிற்றூர்க்கிளை

மே. மதுரை நாடு, அக். 19—

சாத்தூர் வட்டம் மேலாண் மதுரை நாடு திராவிடர் கழக உறுப்பினர்களின் கூட்ட மொன்று 15-10-49-ல் நடைபெற்றது அது போது இவ்வூர் திராவிடர் கழகம் கலைக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகம்-மேலாண் மதுரை நாடு சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. பிறகு தற்காலிக செயற்குழுவொன்று அமைக்கப்பட்டது

செயலாளர் :—எஸ். எம். ராமசாமி; துணைச் செயலாளர்:—எஸ். ஆர். ராஜு; பொருள் உறுப்பினர் :- எம். செல்லக் கனி; விளம்பர உறுப்பினர்:—எம. சார்ஜ் ராஜா ஏனைய செயற்குழுவினர்:—எம். மாரியப்பன், எஸ். செல்லையா, எஸ். சுப்பையா, வி. சின்னதுரை, எம். எஸ். ராமசாமி. பிறகு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

ஊத்தாங்கல் புதுப்பட்டி—சிற்றூர்க்கிளை

ஊ. புதுப்பட்டி, அக். 19—

இவ்வூரில் 15—10—49 அன்று தோழர் ஆர். கந்தசாமி அவர்கள் தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில், 'திராவிட முன்னேற்றக் கழகம்—ஊத்தாங்கல் புதுப்பட்டி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர் :—என். ஆறுமுகம், துணைச் செயலாளர் :—ஆர். கந்தசாமி, நிதி உறுப்பினர்-கே. இளங்கோ, விளம்பர உறுப்பினர்-பி.கருப்பணன். ஏனைய செயற்குழுவினர்-பி. ராமசாமி, எஸ். வீரன், எஸ். கருப்பையா, ராசு, எஸ். கருப்பு. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் தீட்டுகிறார்.

* * *

சேலம் அரிசிப்பாளையம்— நகர உட்கிளை

சேலம், அக். 19—

சேலம், அரிசிப்பாளையம் தி. மு. கழக அமைப்புக் கூட்டம், 15-10-49-ல் தோழர் எம். பி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் எம். கே.குருசாமி, முனுசாமி ஆகியோர் தி. மு. கழகஆக்கவேலைபற்றிப்பேசினர். பின்பு"திராவிட முன்னேற்றக் கழகம்-சேலம் நகர அரிசிப்பாளையம் உட்கிளை" நிறுவப்பட்டுக், கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்: —எம்.கே குருசாமி, துணைச் செயலாளர்கள்:—எம். பி. சுப்பிரமணியம், கே. வி. ராசரத்தினம் ; பொருள் உறுப்பினர்:—கே. எஸ். முனுசாமி; விளம்பர உறுப்பினர்கள்:—கே. பி. லோகநாதன், கே. ஆர். வீரையன். ஏனைய செயற்குழுவினர்:—ஆர். சுப்பிரமணியம், ஜே. கே. வேலாசாமி, கே. பி. கந்தன், கே. எஸ். குப்புசாமி, ஜி. சோமசுந்தரம், பி. எஸ். கோவிந்தராசு, பி. கே. தனகோடி, து. ப. சீனிவாசன், பி. எஸ். கிருஷ்ணன், பி. கே. சித்தையன், உ. கந்தன். இன்னும் 3 உறுப்பினர்களைச்சேர்த்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. எனசெயலாளர் தீட்டுகிறார்.

சந்தா விவரம்

3 மாதம் சந்தா	ரூ	6—0—0
6 மாதம் சந்தா	„	12—0—0
ஒரு வருடசந்தா	„	24—0—0

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

—மானேஜர்:

கொள்கைக்கே எமது ஆதரவு-தலைவருக்கல்ல!

எதிர்க் கட்சியைப் புறக்கணிக்கும் எதேச்சதிகார ஆட்சி!

காஞ்சியில் தோழியர் சத்தியவாணிமுத்து

தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே! இவ் விழாவில் கலந்துகொள்ள வாய்ப்பளித்த இககழகத தோழர்களுககு என வணககம.

நாடெங்கும் திராவிட முன்னேற்றக் கழகத துவக்க விழா நடைபெற்று வருகின்றன. ஏன் திராவிட கழகததிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகமென பிரிந்து வந்துள்ளோம் என்பது யாவரும அறிந்ததே தலைவர் பெரியார் அவர்களின் பொருந்தாத் திருமணத்தினால் கொள்கை பறிபோவதைக் கண்டும, அவர் நம்மை பல வாறுகத் தூஷிப்பதைத் தாள மாட்டாமலும இலட்சியத்திற்காக உயிர்வாழும நாம அவருடன் இருந்து இனிப பணியாற்ற, நம சுயமரியாதை இடந்தரவில்லையென்று வெளி வந்து விட்டோம்.

இலட்சிய வீரர்கள்

கொள்கைககாக வாழ்கிறவர்கள்தான் சிறந்த மனிதர்களாவார்கள். விஷத்தையுண்டு உயிர் நீத்த சாகரடீஸ, வறுமையில் உழன்ற காரல் மார்க்ஸ், துரத்தப்பட்ட ரூஸோ, சகலவற்றையும துறநத புத்தர், தீசகின ரயான புருனோ, ஜான் பாட்லி, ஏன், நம் எதிரில் சுட்டு வீழத்தப்பட்ட காந்தியார் இவாகளெல்லோரும் இலட்சியமே பெரிது உயிர், பணம், சுயநலம் பெரிதல்ல என்று பணிபுரிநததினல்தான் சிறந்த மனிதர்களானர்கள். நமது பெரியாரும் இப்பேர்ப்பட்டவர்களில் ஒருவராகததான் விளங்குவார எனக் கருதியே நாம் அவரைத் தென்னுட்டு காரல்மார்கஸ என்றோம். புத்தரைபபோன்றவர் என்றூர டனகல் அரசு. ரூசோவைப போன்றவர் என்றூர் ஆற்காட்டு ராமசாமி; ஆனல் நம கனவு பலிககவில்லை. கொள்கையைக் காற்றிலே பறக்கவிட்டார். ஆகவே பிரிந்தோம்.

கொள்கைக்காக மற்றவற்றைப் பொறுத்தோம. இதறகு முன் நமமிடையே பல கருத்து வேற்றுமைகள் இருந்தன. ஆனல அடிபபடைக் கொளகை மாறினதில்லை. ஆகவேமாற்றுக்கட்சிக்காரர்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. உதாரணமாக, கடநத இநதி எதிர்ப்புப் போரில் நமமை வாட்டி வாட்டி வதைதது, தாளமுத்து நடராஜர்களை வாழ்விழக்க ஆட்சிபீடம ஏறியிருநத ராஜகோபாலாச்சாரியார் சென்னை வருமபோது அன்னருக்குக் கருங் கொடிபிடிககவேண்டுமென்று கூறி, அதனல் தலைவர்களை கண்டோடுச்செல்லவும் ; சிறுவர் முதல் வயோதிகர்வரை தடியடியும சிறை தண்டனையும் அடையசசெயது. பிறகு அவர் நம் கொள்கைக்கே முரணான பாதாளலிங்கேஸ்வரர் கோவிலைத் திறக்கவந்தபோது, வலியசென்று கூடிக் குலாவினர் என்றால், இது போக்கிலே முரண்பாடுதான. அப்பொழுதும சகித்துக்கொண்டோம! அதே மாதிரி, காளி பூஜையிலும் நரபலியிலும நமபிக்கையுள்ள வைதீகா சர்மா வீட்டில் விருந்துண்டு, அவரின் குணங்களை போற்றிப் புகழ்ந்துவிட்டு, தோழர் அண்ணா அவர்கள் பாரதி விழாவில கலந்துக்கொண்டதைப் பார்பனரோடும காங்கிரசோடும சேரபபார்க்கிறார்என்றார். இதுவும்கருத்து வேறுபாடுதானே. இவைகளை நாங்கள் பொருட்படுத்தவில்லை. ஆரம்பகாலத்தில் பட்டி தொட்டிகளில் நம கொள்கைகளைப் பரவச்செய்த தளபதி அழகிரி அவர்கள் சாகும் தருவாயில் நோயுற்று கஷ்டப்படுகிறார் என்றால்,

அநத நேரத்தில் அவருக்கு உதவியதுதோழர் அண்ணாவே தவிர, கழக நிதிககு வாரிசு தேடிய பெரியாரல்லவே! இவைகளை அவ்வபபோது எடுததுக கேளாதது எங்கள குற்றமல்ல. நாங்கள் கொள்கையினமேல் வைத்துள்ள பற்று எங்களைக் கேட்கவிடாமல தடுததது. தாழ்ந்து கிடக்கும் திராவிடததைத தட்டியெழுப்பும திட்டம வேறு கட்சிகளில இல்லையே, ஆகவே பொறுததுக்கொள்வோம் என்ன நேரினும என்றிருநதோம். திருமணததினல் கொள்கை மாற்றப்பட்டது ஆகவே பிரிந்தோம.

தலைவருக்காகப் பிரச்சினையல்ல பிரச்சினைக்காகவே தலைவர்

எதுவரினும் ஒரே தலைவரின்கீழ் பணிபுரிய வேண்டுமென்பது ஜனநாயக முறையின நியதி அல்ல. நிலைக் கேற்றவாறு பிரச்சினைகளை தீர்ததுனவகக தலைவர் மாற்றுவதே முறை. மேல்நாடுகளில ஏகத்தலைவர் முறையிலை யாது. அபேர்சகாவில முடியரசு ஏற்பட்டு பல தலைவர்கள் மாறிவிட்டனர். இங்கிலாந்திலே பல தலைவர்கள் மாறிவிட்டனர். யுத்தகாலத்தில அரும்பாடுபட்டு நாட்டையே காப்பாற்றிய அறிவாளி சர்ச்சில் போய் அட்லி வரவில்லையா? பிரான்சில் புரட்சியை உண்டாக்கி, வெற்றிபெற்று, குடியரசை யமைத்த நெப்போலியன் போய் பலர் மாறி இப்போது ரீன் மேயர் இல்லையா? சைனவில் சன்யாட்சென் தலைமையில் புரட்சி ஏற்பட்டு மக்கள் சுகவாழ்வு பெற்று அவ்வப்போது நிலைமையை தகுந்த தலைவரால சமாளித்து இப்போது மாசேதுங் தலைமையில் ஆட்சி நடத்தவில்லையா? ஏன்? இந்தியாவில் காங்கிரஸ் ஆலன் என்கின்ற ஆங்கிலேயரும் ஹியூம் என்ற ஆங்கிலோ இந்தியராலும் ஸ்தாபிக்கப்பட்டு அனிபெசண்ட், அன்சாரி, அலி பிரதர்ஸ், காந்தி நேரு போஸ் முதலியவர்களின் தலைமையிலிருந்து இப்போது பட்டாபி சீதாராமையாதலைமையிலில்லையா? ஆகவே என்றும ஒரே தலைவர் இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை என்னும போது, பெற்ற தகப்பனை வேண்டாமெனனும் பிள்ளைகள் நாமென்று நம் நாட்டு "பிரகஸ்பதிகள்" கூறுகின்றனவே!

சர்வாதிகாரம் என்றும் நிலைக்காது

சர்வாதிகாரம் என்றும நிலைததிருக்காது. சார், லூயி, ஹிட்லர், முஸோலினி, முதலியவர்களின் சர்வாதிகாரம நிலைத்ததா? மககள் பொறுப்பார்களா? சரிவே ஏற்படும். அதனல நாட்டிற்கு நலமுமல்ல நாகரீகமுமல்ல ஆகவே. திராவிட முன்னேற்றக் கழகம அமைககவேண்டிய அவசியமாயிற்று. நமது நோக்கம் திராவிடர் கழகத்தின் நோக்கம. ஆனல், வேகமும் உணர்ச்சியும் கலந்தது. இனி நமது வேலை தீவிரப்படும. நாட்டிற்கு நமது தொண்டு அதிகம தேவையாயிருககிறது.

விளக்கம் அங்கே நடைபெறுகிறது.

காஷ்மீர் பிரச்னை பேரில், பாகிஸ்தான் ரஷ்யாவிடமும், நமது பிரதமர் நேரு-சபதாமம் டேசிடவர். ஹைதராபாத் முதலாளித்வ நாடாகிய அமெரிககாவிடமும் உதவி கோருகின்றனர். திடீரென்று போர் மூண்டால் நாட்டு மககளை அதிகமாக பாதிககும் ரூபாயின்ப திட்டுகுறைவினல், பாகிஸ்தானுககும இந்தியாவிற்கும் வேற்றுமை ஏற்பட்டு, பகை உணாசசி அதிகமாயுள்ளது. இந்த நிலையில், நேரு தெளிவில்லாநெஞ்சத்தினராய அமெரிககரிடம் "மதவுண்ட வண்டைபபோல்" மயங்கி மனித உரிமையைப் பற்றியும, சுதந்திரததைப பற்றியும வெளககஙகள மேல் விளககங்கள தருகிறார்.

ஆனல் அவர் பிரதமராகயிருக்கும் நம நாட்டு மககளின் நிலை என்ன என்பதைச் சிந்தித்தாரா? எஙகு பார்ததாலுப பட்டினி, பஞ்சம் லஞ்சஊழல் கள்ளமார்கெட், தொழிலாளர் மீது தடியடி, கண்ணீர்ப் புகை, அடக்குமுறை, சிறைவாசமாயிருக்கிறது. அவைகளை எடுத்துச்சொல்லும் கட்சிகளை வேருடன் களையபார்க்கிறது, சர்க்கார். சிறையிலிட்டு, சுட்டுததளளுகிறாகள பத்திரிகை ஜாமீன புததகததடை, நாடகமததடை, 144 முதலியவைகள் போட்டு பேசவொட்டாமல தடுககுகிறார்கள். இவைகளெல்லாம ஜனநாயகத்திற்கு அடுக்குமா?

எதிர்க்கட்சி புறக்ணிக்கப் படுகிறது

ஏகக் கட்சியாகவே ஆள பார்க்கிறது சர்க்கார். எதிர்கட்சி என்றாலே அவர்களுக்கு சிம்ம சொப்பனமாகயிருக்கிறது. மேல் நாடுகளில் எதிர் கட்சிகளுக்கு எவ்வளவு சலுகைகள் தரப்படுகின்றது. என்பதைஏனோ இவர்கள் அறியார். எதிர்கட்சி ஒன்று இருந்தால், தான் ஆட்சியிலுள்ள குற்றங்குறைகள் ஆளவந்தார்களுககுத் தெரியும. என்று நினைககின்றனர் அன்னாட்டு மக்கள்.

பிரிட்டனில் கன்சர்வேடிவ் லேபர், லிபரல், சோஷியலிஸ்ட், கமயூனிஸ்ட் என்று பல கட்சிகள் இருக்கின்றன இவைகளில் ஆளும் கட்சி ஒன்று இருந்தால, ஆதரவு அதிகமாயுள்ள எதிர்கட்சி ஒன்றுக்கு அதிக சலுகைகள் தரபபடுகின்றன. எதிர்கட்சித் தலைவனுக்கு வருடத்திற்கு 2000பவுன் சமபளமாகத்தரப படுகிறது. அதே மாதிரியாக,

கானடா-சட்டசபை எதிர் கட்சித் தலைவனுக்கு வருஷம் 10.000 டாலர்

ஆஸ்ட்ரேலியா:-சட்ட சபை எதிர்கட்சித் தலைவனுக்கு மற்ற அங்கத்தினரை விட 400 பவுன அதிகம.

நியூசிலான்ட்:- தலைவனுக்கு 250 பவுன் மற்ற அங்கத்தினரைவிட அதிகம். அத்துடன் நாடைப்பிஸ்ட் சம்பளத்துடன்.

இப்படி எதிர்கட்சிகளுக்கு அங்கு ஆதரவு தரப்படுகிறது அமெரிக்கா, பிரான்ஸ், ஆஸ்ட்ரேலியா, பெல்ஜியம், கனடா, தென் ஆப்பிரிக்கா முதலிய முக்கிய நாடுகளில் பல கட்சிகள் உள்ளன. அத்துடன் தொழிலாளர்களுக்கு எவ்வளவோ சலுகைகள். இங்கு தொழிலாளர்கள் சிறையில் சுட்டுத் தள்ளப்படுகின்றனர். உணவில்லாமல மக்கள் பட்டினி கிடந்தால் மந்திரிகள் வரி மேல்வரி கேட்கின்றனர். எடுத்ததெற்கெல்லாம வரி. இவ்வளவு பணத்தை சுரண்டியும், மக்கள் நலனுககாக ஏதாவது செய்ய பணமில்லை என்கிறார்கள், மந்திரிகளோ ஊர் ஊராகசுற்றுப்பிரயாணம்செயவதிலேயே காலம் தள்ளுகின்றனர், சர்க்கார் பணததில். இந்த நேரத்தில் தென்னாட்டில் ஆந்திரர்களுக்கும் தமிழர்களுககும் சென்னையை பங்குபோடும் சண்டை, மொழிவாரி மாகாணங்கள் பிரிந்தால்கூட வேற்றுமையுணர்ச்சியில்லாமல் குறைவு நிறைவுகளை சரிபடுத்தி ஒற்றுமையோடு வாழ, திராவிட கூட்டாட்சி ஒன்றன் மூலமாகத்தான் முடியும். எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பலப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து எங்களுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

எல்லாம் ஒரு குளத்து நண்டுகளே!

கிழக்குப்பஞ்சாப் முதலமைச்சர் தனது பதவியை ராஜிநாமா செய்ததற்குள்ள காரணங்களை விளக்கிப் பேசியபோது, முக்கியமாக அவர் குறிப்பிடும் காரணங்கள் இரண்டு. ஒன்று, கள்ள மார்க்கட்காரர்களை ஒழித்துக்கட்ட அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள். மற்றொன்று தனது சகாக்கள் மேலிடத்தார் சலுகை பெற்று செய்த சில துரும்புத்தனங்கள் ஆகும்என்று கூறியிருக்கிறார்.

கிழக்குப்பஞ்சாப் முதலமைச்சர் கூறும்காரணங்களில், இரண்டாவது காரணம் மிக மிக இன்றியமையாத காரணமாகும். மாகாண அரசியல்கள் மேலிடத்தாரால் எங்ஙனம் பாதிக்கப்படுகின்றன என்பதற்கு இதோர் எடுத்துக்காட்டு. 'மேலிடம்' என்னும்ஒரு அதிகாரப் பீடத்தின் பிடி மாகாண அரசியல்களின் பிடரியைப் பிடித்துக் கொண்டிருக்கும் வரையில், மாகாண நிர்வாகத்தில் பல குழப்பங்கள் ஏற்படுவதில் ஆச்சர்யமில்லை. இது ஒரு புறமிருக்க. கள்ள மார்க்கெட்காரர்களைக் கண்டித்ததன் விளைவாகவேதான் வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது என்று, வெளியேறும் முதலமைச்சர் விளம்புவதையும் நாம் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கள்ள மார்க்கட்காரர்களைக் கண்டித்த ஒரே காரணத்தால் மட்டும் முதலமைச்சர் வெளியேற நேர்ந்தது என்று சொல்லுவதற்கில்லை. கள்ளமார்க்கெட்காரர்களைக் கண்டிக்க முன் வந்த இவர்தான் களங்கமில்லாத மனிதராக இருந்திருப்பின், குற்றச் சாட்டுகளுக்கு இடமேற்பட்டிருக்காது. இன்றைபக்காங்கிரஸ் ஆட்சியில் யார் கள்ள மார்க்கெட்காரர்கள், யார் கள்ளமாக்கட்டையே கண்டிராத கண்ணியர் என்று அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. சற்று வளைத்துப் பார்த்தால், எல்லாம் ஒரு குளத்து நண்டுகளாகவே காணப்படுகின்றன. ஒருவர் கள்ளமார்க்கட்காரர்களால் காட்டிக்கொடுக்கப்படுகிறார் என்றால், காட்டிக்கொடுக்கப்படுபவரின் சிண்டு, எந்தவிதத்திலோ கள்ளமார்க்கட்காரர் கையில் சிக்கியிருக்கிறது என்பதுதான், இத்தகைய தகாறுகளில் அடங்கியிருக்கும் உண்மை. இதனைச் சுருங்கச் சொல்ல வேண்டுமானல், காங்கிரஸ்ஆட்சியில் 'காணுமிடமெல்லாம் கள்ள மார்க்கெட்டே' என்றுதான் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணிபார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர், மாலைமணி

புதுக்கழகம்: புதுக்கொடி: புதுவேகம்!

பணி பெரிது - பாடுபடுவோம்

நாட்டிற்கு நம்மைத் தவிர வேறு நாதி யில்லை

கோவில்பட்டியில் 17—10—49 திங்களன்று நடைபெற்ற, திராவிட முன்னேற்றக் கழகம்—கோவில்பட்டி கிளையின துவக்க விழாவிலே கலந்து கொண்டு, தோழர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

"நமக்கெலாம் தலைவராகவும், தந்தையாகவும் இருந்த பெரியார் ராமசாமி அவர்களின் தலைமையிலிருந்து விலகி திராவிடமுன்னேற்றக் கழகம் கண்டிருக்கிறோம். காரணம் கொள்கையிலே இருந்த உறுதியும் 'வெறி'யுந்தான்! பெரியார் கொள்கையிலிருந்து தவறினர். நாம் ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தோம் பகுத்தறிவுத் தலைவர் பொருந்தா மணம் புரிகிருர் எனக் கேட்டதும்.

பொறுக்கமுடியாத சர்வாதிகாரம்

அழுதோம். ஆகாது ஐயா எனக் கெஞ்சினோம். தலைமீறிச் செல்ல முடியாது தலைவரே! எனத் தவித்தோம். ஐந்து லட்ச ரூபாய்... அதைப்பாதுகாக்க திருமணத்தைத் தவிர வேறு ஏற்பாடு கிடையாதாம்! வைத்யசாலைகள் கட்டலாம். கல்லூரிகள் அமைக்கலாம். நன்கொடை வழங்க நாட்டிலே எத்தனையோ துறைகள் உண்டு. எத்தனையோபேர் வழியும் காட்டியிருக்கிருர்கள். அப்படியெல்லாம் தலைவருக்கு மனம்வரவில்லையென்றாலும் ஐந்து லட்சத்துக்கும் அவருடைய வெண்கலச் சிலைகளைச் செய்து திராவிடத்தின் வீடுதோறும் ஒன்று அன்பளிப்பாகத் தந்தால் கூட வரவேற்று வாழ்த்தியிருப்போம்!

கொள்கையைக்கொன்றதலைவர் குதிரை கீழே தள்ளியது மட்டுமின்றி, குழியும் பறிப்பது போல, கொள்கை வழி நின்றவர்களைச் சுயநலமிகள், துரோகிகள், அப்பாவிகள், ஆட்டு மந்தைகள் சதிகாரர்கள் என 'சகஸ்ரநாமம்' அர்ச்சனை புரியத தொடங்கினர். தாலமுத்து நடராசன்களின் கல்லறைகளைக் காண வைத்த நாங்கள் சுயநலமிகளாம்! குடந்தைத் தெருவிலே குருதியைக் குடம்குடமாகக் கொட்டிய தொண்டர்கள் துரோகிகளாம்! உடையார்பாளையம் வேலாயுதத்தின் பிணத்தை அவர் காலடியிலே போட்டுக் கண்ணீர்விட்டவர்கள் சதிகாரர்களாம்! நாகை மணிகள், மாயவரம் நடராஜன்கள் அழகர்சாமிகள் நிறைந்த தொண்டர் பரம்பரை நம்பிக்கைக்கு ஏற்றது அல்லவாம்! அவர் ஒருவர் மட்டுமே கழகமாம்! நாடாம்! அந்த சர்வாதிகாரப் போக்குச் கூடாது என்றுதான் பங்குகொண்டு பணிபுரிய-அனைவர் திறனும் ஒன்றிணைய-திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்தோம். இயக்கத்துக்காக ஒரு வாரிசு ஏற்பாடு பொறுக்க முடியாத சர்வாதிகாரம்! எனவே பிரிந்தோம்.

நேரு சென்றுள்ளார்

நாடு இன்றுள்ள நாச நிலையில், எங்கள் தொண்டு அவசியம் என்பதை உணர்ந்தோம். பசி பசி என மக்கள் கதற, பண்டித நேரு அமெரிக்கப்பயணம் நடத்தும் நேரமிது. நாட்டுத் தலைவர் இருவர் பேட்டிகொடுக்கிறது என்றால், உலக விவகாரம், வியாபாரத் தராறு வேறு ஏதாவது முக்கிய ஒப்பந்தம் இப்படியிருக்கும் செய்தி! ஆனால் இந்த பரிதாபகரமான உபகண்டத்தின் தலைவரோ இதுவரைப் பார்க்காத காரணத்தால் அமெரிக்காவைப் பார்க்கச் செல்லுகிறார்; வேலையற்ற குப்பன் வேதாரண்யம் காடு பார்க்க செல்வது போல! குப்பனாவது வேதாரண்யம் செல்வதில் அர்த்தமிருக்கிறது. நேரு குப்பன் நிலைமையில் இருப்பவர் அல்லவே. பொறுப்புள்ளவர் ஆயிற்றே! அவர் உல்லாசப்பயணம் செல்லலாமா?... அதுவும் நாடு சுற்றிப்பார்க்கப் போவதாக நவின்றவர், நாட்டு மக்கள் நலிவு தீர்க்கும் மருந்து ஓலைவுக்கு நல்ல முறையால் கிடைக்கும் ரஷ்யாவுக்கா சென்றார். அப்படியும் இல்லையே. முதலாளித்வ மனப்பான்மை கொண்ட அமெரிக்காவுக்கு அல்லவா செல்கிறார். அமெரிக்காவில் பிர்லா 'பஜாஜ்களை விட பெரிய முதலாளிகளை, பெருஞ்சீமான்களைக் காண முடியும். பாட்டாளி உலகம் பரிகசிக்கும்செயலைப் பண்டிதர் செய்கிறார். ஏன்? பகுத்தறிவு உலகம் பரிகசிக்கும் செயலைக்கூடத்தான் செய்கிறார். அமெரிக்க ட்ரூமனுக்கு நேரு மைசூரிலிருந்து தந்தப்பேழையொன்றை பரிசாகக் கொண்டு போயிருக்கிறாராம். பேழையின் பக்கங்களில்பாரத ராமாயணக் கருத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றனவாம். மதச்சார்பற்ற அரசாங்கத்தின் தலைவர் எடுத்துச்சென்ற மகோன்னத பரிசு அது!... ட்ரூமன் ராமாயணம் என்றால் என்ன என்று கேட்கும்போது, ஆரியருக்கும் திராவிடருக்கும் நடந்த சண்டையென்று, தான் முன்பு எழுதியதை இப்போது சொல்லவா போகிறார் நேரு!... முன்பு எழுதியதைப், பேசியதை மறந்துவிடுகிற நிலைதான் பெருந் தலைவருக்கு சகஜமாயிற்றே! பாரத விளக்கம் ட்ரூமன் கேட்க-பண்டித நேருபாஞ்சாலி அம்மையைப்பற்றிச் சொல்ல-இந்திய நாட்டுக் கற்பு மகிமையும் இப்படித்தானா என்று அமெரிக்கத் தலைவர் அதிசயிக்க—அதுமட்டுமல்ல ஐந்துபேரையன்னியில் ஆறுவதாகக் கர்ணனையும் காதலித்த பாஞ்சாலி என்று இந்திய மாணிக்கம் கூறிட—பக்கத்திலுள்ளோர் கைகொட்டி சிரிக்காவிட்டாலும், மனதிற்குள்ளாகவாவது எள்ளி நகையாடுவார்களே-இதை நினைத்துப் பார்க்கவே நமக்கு வேதனையாக இருக்கிறது.

ஆடம்பரச் செலவு

ஏழைகளின் ரத்தம் இங்கு காசாக்கப்பட்டு ஆளவந்தாரின் ஆடம்பரத்துக்கு மட்டும் செலவிடப்படுகிறதே; இதை நினைக்க நோக வேண்டாமா? அமெரிக்கத் தூதுவர் விஜயலட்சுமிக்குப் பத்தாயிரம் டாலர் தேவையாம். ஏன்?...ஏதாவது அமெரிக்க இயந்திரங்களை வாங்கி அனுப்பவா? இல்லை. இல்லை அம்மையாரின் மாளிகையை அழகுபடுத்த! ஆடம்பரக் கூடமாக்க!

பாக்கிஸ்தான் பகை

ரூபாய் மதிப்பீட்டைக் குறைத்தார்கள். பாகிஸ்தானுடன்பகையை வளர்க்கிருர்கள். இரு நாட்டின் பகை தென்னாட்டின் தொழில் வளர்த்துக்கு தொல்லையாக முடிகிறது. பாகிஸ்தான் தோல் அனுப்பாதென்றால் தென்னாட்டுத் தோல் தொழிற்சாலைகள் மூடப்படவேண்டி நேரிடும்.

தென்னாடு தலை தூக்கவேப்போ?

உழவுத் தொழில் அபிவிருத்தி என்று சொல்லிகொண்டு ஐந்து கோடி என்ற இந்தியா கடன் வாங்கியிருக்கிறது. அபிவிருத்தித் திட்டப்படி வடஇந்தியாவில் 30 லட்சம் ஏகர் தரிசு நிலங்களைப் பயிர் செய்வார்களாம். ஒரு லட்சம் ஏகர் காடுகள் அழிக்கப்படுமாம். தென்னாட்டில் உழவு அபிவிருத்தியைப் பற்றிய விளக்கம் கிடையாது. எப்படித் தென்னாடு தலை தூக்க முடியும்?...

இதையெல்லாம் கவனிக்க தென்னாட்டுத் தேசியதலைவர்களுக்கு, ஆளவந்தவருக்கு அக்கறையில்லை. திராவிடர் இயக்கத்தின் மீது அடக்குமுறைகளை வீச அயராது கஷ்டப்படுகின்றனர். அடக்குமுறைகளை அமுல் நடத்தும் இந்த அகிம்சா வீரர்கள், வடநாடு, இவர்களை தோளை அழுத்தும் போக்கை அலட்சியப்படுத்துகிருர்கள்.

தென்னாட்டின் வளமனைத்தையும் தேய்த்துவிடக் கருதும வடநாடு, தமிழ் நாட்டாரை ஊமையாக்க-தமிழ் மொழியை சிதைக்க வெங்குருதி தனிற கமழ்ந்து வீரஞ் செய்கின்ற தமிழ்மூசசை ஒடுக்க-இந்தி யெனும சிமாட்டிக்கு சாமரம் வீசிடும் சதியை வெற்றிகரமாக நடத்த ஆரம்பித்துவிட்டது.

அடக்குமுறை பாணம்

ஏன் என்று கேட்கும் நம்மை நோக்கி சீறுகிருர்கள். பேசாதே எழுதாதே! நடிக்காதே! என்று அதட்டுகிருர்கள். பலாத்காரமென்ற காரணம் காட்டி கம்யூனிஸ்டுகளை சட்டவிரோதமாக்கி, காந்தியாரின ரத்தத்தைக் குடித்த ஆர். எஸ். எஸ்களை அணைத்துக்கொண்டு, அறிவுப்படையினராகிய நம்மீது அடக்குமுறை அம்புகளை அள்ளி இறைக்கிருர்கள்.

நமக்கு இருக்கும் பணியோ கொஞ்சமன்று!... இந்தி எதிர்ப்பு, அடக்குமுறை எதிர்ப்பு அறப்போர், தடையுத்தரவு மீறும் படலம் இவ்வளவும் நாம் செய்தாக வேண்டும். ஆம் நாமேதான்! நம்மைத்தவிர இந்த நாட்டுக்கு வேறுநாதியில்லை.

வீரர்களே!......வெற்றிமுரசை சாக்காட்டில் விளையாடும் தோள் படைத்தோரே!... தோழரே!... தொண்டு தொடங்குக திராவிட முன்னேற்றக்கழக அவியநாதில வந்து நில்லுங்கள். புதுக்கழகம் புதுக்கொடி, மட்டுமல்ல; புதுவேகமும் கூட உண்டு அறப்போர் மீண்டும் துவங்குக"

இனி நடப்பவை

கோவை— 30-10-49 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்குக கோவை திராவிட முன்னேற்றக் கழகத்தில் தியாகராயர் படிப்பகத்தின் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். புதிய செயற்குழு தேர்ந்தெடுத்தலும். வேலைமுறைபற்றி ஆலோசித்தலும் நடைபெறும்.

* * *

ஐவநல்லூர்— நாகையை அடுத்த ஐவநல்லூரில் திராவிட முன்னேற்றக் கழகத துவக்கவிழாப் பொதுக்கூட்டம 29-10-49 சனியன்று மாலை 6-மணிக்கு நடைபெறும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசுவார்கள்.

* * *

ஆனைமலை— ஆனைமலை திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாவும், திராவிட மாணவர் முன்னேற்றக்கழகத்துவக்கவிழாவும் -9-10-49 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு சின்னக்கடைவீதியில் நடைபெறும். தோழர் டி கே. சீனிவாசன் அவர்கள் சொற்பெருக்காற்றுவார்.

* * *

கடலூர் (NT)— தோழர்கள க பாலசுப்பிரமணியம்— மங்களம் திருமணம் தேவனாம்பட்டணத்தில் 28-10-49 காலை 8-மணிக்கு தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. இளம்வழுதி, என். ஜீவரத்தினம், முனுசாமி, தில்லை வில்லாளன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

திருப்பூர்— 28-10-49 வெள்ளியன்று மாலை 7-மணிக்கு, நகர திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில், செயலாளர் கே. எஸ். மணி அவர்கள் தலைமையில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும் உறுப்பினர்கள் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

துவக்கவிழாப் :: :: பொதுக்கூட்டங்கள்

விருத்தாசலம்

விருத்தாசலம், அக். 24— 20—10—49-ல் விருத்தாசலம் நகர கிளை. தி. மு கழக துவக்க விழா பொதுக்கூட்டம். திரு இஸ்மாயில் அவர்கள் தலைமையில் ரேடியோ மைதானத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒலி பெருக்கியும், மின்சார விளக்குகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. துவக்கத்தில் தோழர் வி. பி. கே. பெருமாள் நாட்டுப் பண்பாடல் பாடினர். பின் தோழர் என். வி. நடராசன் தோழர் ஏ. வி. பி ஆசைதம்பி முதலியோர் தி மு கழக அவசியமும் எதிர்கால வேலையும் என்பது பற்றி உணர்ச்சியுடன் 1-30 மணி நேரம் பேசினர்கள் முடிவுரையாக தோழர் ராமய்யா நன்றி கூறக் கூட்டம் முடிவடைந்தது. (வி-உ)

திருவெறும்பூர்

திருவெறும்பூர், அக். 20— திருவெறும்பூர் சந்தை மைதானத்தில் நேற்றுமாலை 6 மணிக்குக் குறிப்பிட்ட தலைவர் தோழர் எ. பரமசிவம் அவர்கள் உடல் நலம் சரியில்லாத காரணத்தால் வர இயலாமற் போகவே, விருதுநகர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் கூட்டத்தின் நோக்கத்தையும், கொள்கையையும் குறித்து வெகுவிரிவாகப் பேசினர் அடுத்தபடி தோழர் இரா. துரைராசன் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது பற்றிப் பேசினர் பிறகு தோழர் என். வி. நடராசன் அவர்கள் பெரியார் தலைமையினின்றும் ஏன் பிரிந்தோம் என்பது பற்றி விளக்கமாகவும் விரிவாகவும் உரையாற்றினர். சிலர் கேட்ட கேள்விக்குத் தகுந்த முறையில் விடையளித்தார். விளம்பர உறுப்பினர் தோழர் கா. ந. தமிழரசன் நன்றி கூறக் கூட்டம் இரவு 8-30 மணிக்கு இனிது முடிவுற்றது. (வி-ர்)

கூடலூர் பழைய பட்டினம்

கூடலூர், அக். 24— கூடலூர் பழைய பட்டினம-நகரக் கிளையின துவக்க விழா 23-10-49 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சிறப்பான முறையில் நடந்தேறியது.

செட்டிக்கோவில் திடலில் ஆர்வம் நிறைந்த மாணவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் கொண்ட திரளான மக்கள் குழுமியிருந்தனர் வருங்கால திராவிடத்திற்கு வழிவகுக்கும் விழாவாக அமைந்தது. வீதியோரங்களில் மக்கள் நின்று மகிழ்ச்சியுடனும் மலர்ச்சியுடனும் கேட்டனர் நன்கு மாத காலம் நிலையற்றுக் கிடந்த நினைப்புகள், எண்ண அலைகள் மக்கள மனதை மீண்டும் தட்டி பெழுப்பும் வண்ணம் பேச்சு அமைந்திருந்தது.

கூட்டத்திற்கு பஞ்சாயத்து மன்ற தலைவரும், தி. மு. க துணைச் செயலாளருமான கு. தண்டபாணி அவர்கள் தலைமைதாங்கினர்கள். தோழர் சக்கரபாணி 'திராவிட நாட்டுப் பண்' பாடினர்.

தலைவர் தம் முன்னுரையில் துவக்க விழாவின் அவசியத்தை விளக்கினர்.

சேலம் ஏ. சித்தையன்

பின்னர் தோழர் சேலம் சித்தையன் அவர்கள் திராவிட முன்னேற்றக்கழகம் தோன்ற வேண்டி ஏற்பட்டதன் காரணத்தையும், கைத்தறி நெசவாளர் குறைபாடுகளையும், துணி வியாபாரம, எப்படி வடநாட்டாரால் கட்டுப்பாடாக கைப்பற்றப்பட்டிருக்கிறது என்பதையும் பற்றியும் தற்போதைய அரசியல் நிலைப் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்

என். வி. நடராசன்

அடுத்தபடி என். வி. நடராசன் அவர்கள் பேசும்போது பெரியாரின் பொருத்தமற்ற கொள்கையைக் கைவிட்டு செய்துகொண்ட, 32 பேர் மாற்றுக் கருத்து தெரிவித்தும், திருச்சியில் மத்திய செயற்குழு நடந்த முதல் நாளே செய்துகொண்ட திருமணத்தால் தான் வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது கருத்திற்கு செவிசாய்க்காத, சர்வாதிகாரப்போக்கு தலைவர் பெரியாரிடம் பல சமயங்களில் காணப்பட்ட போதும். கொள்கைக்காகவே தலைவரின் கட்டளைக்கு கட்டுப்பட்டோம்; இன்று கொள்கைக்கு சாவோலை நீட்டும்போது அமைப்பு முறையற்ற கழகத்திலிருந்து விலகி புதுக்கழகம் திட்டவட்டமான அமைப்பு முறையுடன் உண்டாக்க வேண்டி நேரிட்டது. இதில் தப்பிதம் என்ன? திராவிடர் கழகத் தோழர்கள், தி. மு கழகத்தோரிடம் மோதுதல் செய்யவேண்டிய அவசியமில்லை. இன்றைய அரசாங்கம் அண்ணாவின் மேல் வழக்குத் தொடுக்க தாக்கீது அனுப்பியுள்ளது. அண்ணாவை சிறைப்படுத்துவதன் மூலம் கழகத்தை அழிக்க முடியாது. பாசிச அரசாங்கத்தை வீழ்த்தும் துப்பாக்கி திராவிடர் கழகம். அதன் வயிற்றில் பிறந்தபீரங்கி திராவிடர் முன்னேற்றக் கழகம் என அறியட்டும் இன்றைய அரசாங்கம், இரண்டுக்கும் கொள்கை மாற்றம் கிடையாது என்றுமொழிந்தார் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு தக்க பதிலளித்தார் கூட்டத்தின் நடுவே சில காலிகள் இரண்டு கற்களை வீசி கலைக்குமுயன்றனர். அப்படியிருந்தும் ஆர்வமுடைய மக்கள் கலையாமல் அமைதியாக செவி மடுத்தனர்.

இறுதியாக தலைவர் முடிவுரை கூறினர். தோழர் இளங்கோ அவர்கள் நன்றி கூறகூட்டம் இனிது முடிந்தது (வி - உ)

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலைமணி' விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

(1) நாமக்கல்,
(2) கீவளூர்,
(3) முசிறி,
(4) திருமலைராயன் பட்டணம்,
(5) செம்மனர்கோயில்,
(6) மங்கநல்லூர்,
(7) பாப்பா நாடு,
(8) நன்னிலம்,
(9) ஜோலார் பேட்டை,
(10) பாங்கிபேட்டை,
(11) துவரன்குரிச்சி,

அவள் வாழ்வு...?

ஆசிரியர்:—ஆசைத்தம்பி.

கருத்துச் செறிவுடன் சிந்தனைக்கு விருந்தூட்டும்படி அமைந்துள்ளன.

விலை 0—8—0

பெரிய இடத்துப் பெண்

(அச்சில்)

ஆசிரியர்:—மு. கருணாநிதி.

வியாபாரிகட்கு தக்க லாபம் தரப்படும்.

—: விலாசம் :—

திராவிடன் பதிப்பகம், P. B. No. 18, வேலூர். N. A.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty-Street, Madras-1.